எம். எஸ். வசந்தகுமார்



# துன்மார்க்கரின் வளமும் நீதிமானின் துயரமும்

73ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை

சத்தியவசனம் வெளியீடு

# துன்மார்க்கரின் வாழ்வும் நீதிமானின் துயரமும்

## 73ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை

வேதஆராய்ச்சியாளர்

**எம்.எஸ்.வசந்தகுமார்**

சத்தியவசனம்

9 வெங்கட்ராமன் தெரு, சின்னசொக்கிகுளம்

மதுரை 625 002, தமிழ்நாடு, இந்தியா.

# THE PROSPERITY OF SINNERS AND THE SUFFERINGS OF THE SAINTS
## An Expository Study on Psalm 73


*Written by*

**M.S. VASANTHAKUMAR**
**48, Victoria Road, Walthamstow, London E17 4JU**
**Phone: 0044 (0)208 2814678**
**Email: vasanthakumarms@yahoo.co.uk**



*Published by*

**SATHIYA VASANAM**
**9, Venkatraman Street, ChinnaChokkikulam**
**Madurai 625 002 , India**
**Phone: 0452 2532316**
**Email: svmadurai@eth.net**

*Published for*

**THE TAMIL BIBLE RESEARCH CENTRE**
**Sri Lanka & England**
**First Published in Sri Lanka Decembr 2004, Copies 2000**
**Second Indian Edition January 2006, 1500 Copies**



© M.S. Vasanthakumar, 2005

No part of this publication may be reproduced in any form without the prior permission of the author.

அனுமதியின்றி பிரதி பண்ணுவது தடைசெய்யப்பட்டுள்ளது

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்பாளர் உரை | 04 |
| முகவுரை | 05 |
| ஆசிரியர் உரை | 07 |
| 73ம் சங்கீதம் | 09 |
| 73ம் சங்கீதத்திற்கான சுருக்கச் சட்டம் | 11 |
| அறிமுகவுரை | 12 |
| முதலாம் அத்தியாயம் | 18 |
| இரண்டாம் அத்தியாயம் | 38 |
| முடிவுரை | 52 |
| உசாத்துணை நூல்கள் | 56 |
| ஆசிரியரின் பிற நூல்கள் | 59 |


இவ்விளக்கவுரை தமிழ் வேதாகமத்தின் பழைய மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு சில புதிய மொழிபெயர்ப்புகளும் ஆங்கில வேதாகமங்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன.

இவை பற்றிய விபரம் வருமாறு:

திருவிவிலியம் (Tamil Nadu Biblical, Catechetical & Liturgical Centre, Tindivanam, India, 1995).

புதிய தமிழ் வேதாகமம் (International Bible Society Lanka (Gte) Ltd, Sri Lanka, 2002).

மோனஹுன் மொழிபெயர்ப்பு (The Bible Society of India, Bangalore, India)

ஆங்கில-தமிழ் இணை வேதாகமம் (India Bible Literature, Chennai, 2000).

| | |
|---|---|
| NIV: | New International Version |
| NASB: | New American Standard Version |
| NRSV: | New Revised Standard Version. |
| KJV: | King James Version |
| NKJV: | New King James Version |

# பதிப்பாளர் உரை

"அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்". (சங்.119:72)

அன்புடையீர்

மீட்பர் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

சகோதரர் எம்.எஸ்.வசந்தகுமார் அவர்களின் புத்தக வரிசையில் இரண்டாவது புத்தகமாக துன்மார்க்கனின் வளமும் நீதிமானின் துயரமும் என்ற புத்தகத்தை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இப்புத்தகமானது 73ஆம் சங்கீதத்தின் விளக்கவுரையாகும். துன்மார்க்கன் செழிப்பாய் வாழ்வதை நாம் காணும்போது நீதிமானுக்குமாத்திரம் ஏன் துயரம் ஏற்படுகிறது என்ற கேள்வி இன்று நம்மில் அநேகவேளைகளில் எழுவது இயல்பான ஒன்றாகும். இக்கேள்விக்கு 73ஆம் சங்கீதத்தை எழுதிய சங்கீதக்காரனின் அனுபவத்திலிருந்து இப்புத்தகத்தின் ஆசிரியர் மிகவும் தெளிவாகவும் எளிய முறையிலும் பதிலளித்துள்ளார்கள். இப்புத்தகம் அநேகருடைய சந்தேகங்களை நிவர்த்தி செய்வதாய் அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு பக்கத்திலும் இடம்பெற்றுள்ள அடிக்குறிப்புகள் வசனத்தின் சரியான அர்த்தங்களை அறிந்துகொள்ள உதவியாயிருக்கும்.

இப்புத்தக வெளியீடுகளை ஏனைய உங்கள் ஆவிக்குரிய நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைக்க அன்பாய் கேட்கிறோம். இதன்மூலமாக தாங்கள் பெற்ற ஆசீர்வாதங்களையும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களையும் எங்களுக்கு எழுதித் தெரிவியுங்கள். இப்புத்தக ஊழியம் இன்னும் சிறப்பாக நடைபெற நீங்கள் ஜெபிக்கும்படியாய் அன்பாய் கேட்கிறோம். தேவனுடைய மாறாத பிரசன்னம் நம் அனைவரோடுங்கூட இருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்

(கே.பழனிவேல் ஆபிரகாம்)
பொறுப்பாளர், சத்தியவசனம்

# முகவுரை

சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீசில் நடைபெற்ற சீயோன் சுவிசேஷ சபையின் 14வது ஆண்டு விழாவில், வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார் அவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தைத் தேவன் எனக்கு கொடுத்தார். அச்சமயம், இவர் தேவனுடைய வார்த்தையை சிறப்பான முறையில் வியாக்கியானம் செய்யும் ஒரு வேதாகம ஆசிரியர் என்பதை அறிந்துகொண்டேன். இவருடைய வேதஆராய்ச்சிப் புத்தகங்களும், பிரசங்கங்களும் வேதாகம சத்தியங்களைக் கற்பிக்கும் ஆவிக்குரிய ஆசானாக உள்ளன. இவை கிறிஸ்தவ வாழவைப்பற்றி பலருடைய உள்ளத்தில் இருக்கும் சந்தேகங்களை நீக்கியுள்ளதோடு, அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் இருந்துள்ளது.

வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார் இந்நூலில், துன்மார்க்கர் வளமடைவதையும் நீதிமான் துயரப்படுவதையும் பற்றி பெரும்பாலான கிறிஸ்தவர்களுடைய உள்ளத்தில் இருக்கும் கேள்விக்கான பதிலை 73ம் சங்கீதத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதியுள்ளார். நாம் ஆவிக்குரிய வாழ்வில் எத்தகைய நிலையில் இருந்தாலும், கிறிஸ்தவர்களாகிய நம் அனைவரின் உள்ளத்திலும், இவ்வுலகில் துன்மார்க்கர் செல்வச் செழிப்பிலும், நீதிமான்கள் துயரத்திலும் வாழ்வதைப்பற்றிய கேள்விகள் உள்ளன.


எனவே நம் அனைவருக்கும் இந்நூல் அவசியமான தொன்றாக உள்ளது.

73ம் சங்கீதத்தை ஆழமாக ஆராய்ச்சி செய்து, இந்நூலை எழுதியுள்ள வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமாரை நான் பாராட்டுகின்றேன். 73ம் சங்கீதத்தை ஆழமாக ஆராய்ச்சி செய்துள்ள ஆசிரியர், நம்முடைய ஆவிக்குரிய வாழ்வுக்குப் பயனுள்ள பல அரிய சத்தியங்களை இந்நூலில் எழுதியுள் ளார். இவை கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு ஆறுதலையும், ஆவிக்குரிய பெலத்தையும், உற்சாகத்தையும் தருவதாய் உள்ளன.

தேவன் நீதிமான்களுடைய வாழ்வுக்கு எத்தகைய திட்டத்தை வைத்துள்ளார் என்பதை அறிந்துகொள்ளும் விதத்தில் இந்நூலில் 73ம் சங்கீதம் இறையியல்ரீதியாக ஆராயப்பட்டுள்ளது. இந்நூலின் மூலம் இச்சங்கீதத்தைப் படிக்கும் உங்களைத் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக.

இந்நூலை எழுதியுள்ள வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ். வசந்தகுமாருக்கு எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துதல் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். தேவன்தாமே உங்களைத் தம்முடைய தெய்வீக ஞானத்தினால் நிறைத்து, அவருடைய நாமத்தின் மகிமைக்காக இன்னும் அநேக புத்தகங்களை எழுதுவதற்கு உதவி செய்வாராக.

பாஸ்டர். பால் தங்கையா
(பெங்களூர் - இந்தியா)



# ஆசிரியர் உரை

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் முதலில் என்னுடைய வாழ்த் துக்களை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

என்னுடைய எழுத்துப்பணியில் இந்நூல் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இதற்குக் காரணம் இது என்னுடைய 25ஆவது புத்தகமாக உள்ளது. மேலும், இது இலங்கையிலும் இந்தியா விலும் ஒரே நேரத்தில் வெளியிடப்படுகின்றது. இலங்கையில் இந்நூலை மலிவான விலையில் மக்களுக்கு கொடுக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் இதை அச்சிட்டு வெளியிடும் செலவுகள் அனைத்தையும் பொறுப்பேற்றுள்ள லண்டன் தெய்வீகக் கிறிஸ் தவ சபையினருக்கு முதலில் என்னுடைய நன்றிகளைத் தெரிவித் துக்கொள்கின்றேன். இந்தியாவில் மதுரை சத்தியவசனம் ஸ்தாப னத்தின் மூலம் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

இந்நூல் 73ம் சங்கீதத்திற்கான விளக்கவுரையாகும். வழக்கம் போலவே, இச்சங்கீதத்தையும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் உள்ள தமிழ் சபைகளில் பிரசங்கித்தபோது பலர் தங்களுடைய கிறிஸ்தவ வாழ்வில் நீண்டகாலமாக இருந்த மிகப்பெரிய கேள் விக்கான பதிலைக் கண்டுகொண்டனர். தேவனுக்குப் பயந்து பரிசுத்தமாக வாழும் நீதிமான்களுடைய வாழ்க்கையில் துயரங் கள் ஏற்படும்போது, தேவபக்தியற்ற துன்மார்க்கர் செல்வச் செழிப்பில் சுகபோகமாக வாழ்வது பல கிறிஸ்தவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கான பதிலைப் பலர் இச்சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்ட பிரசங்கத்தின் மூலம் அறிந்துகொண்டதோடு, தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் எவ்வாறு தேவனை நம்பி வாழவேண்டும் என்பதையும் அறிந்து கொண்டனர். இதேவிதமாக 73ம் சங்கீதத்திற்கு விளக்கவுரையாக எழுதப்பட்டுள்ள இந்நூலும், உலகெங்கும் வாழும் தமிழ் பேசும்

கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்வுக்குப் பயனுடையதாக இருக்கும் என்னும் நம்பிக்கையுடன் இந்நூலை எழுதியுள்ளேன்.

இந்நூலின் மூலப்பிரதியை வாசித்து திருத்தங்கள் செய்ய உதவிய பாஸ்டர் ஜி.ஐ.எபெனேசர் (லண்டன்) பாஸ்டர் பவுல் அம்பி சின்னத்துரை (ஜெர்மனி), மற்றும் லண்டனிலிருக்கும் சகோதரர் சதீஷ் அம்பிகைபாகன், சகோதரிகள் சசி கிறிஸ் டோபர், ஜெயசீலி ரவிராஜ், இலங்கையைச் சேர்ந்த பெர்னாட் ஷன் என்போருக்கும், என்னுடைய இலங்கைத் தமிழ் இந்தியத் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்குப் புரியும் விதத்தில் திருத்தங்கள் செய்ய உதவிய மதுரை சத்திய வசன ஊழியங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் சகோதரன் பழனிவேல் ஆபிரகாமுக்கும், பாரீஸ் நகரில் சந்தித்தபோது இந்நூலை வாசித்து இதற்கு முகவுரை எழுதித்தந்து என்னை உற்சாகப்படுத்திய பிரபல கிறிஸ்தவப் பாடகரும், தேவஊழியருமான பாஸ்டர் பால் தங்கையா அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித் துக் கொள்கின்றேன.

இந்நூலில் உள்ள அடிக்குறிப்புகள், மேலதிக விளக்கத்திற்காக வும், வேதாகமத்தை ஆராய்ந்து படிக்க விரும்புகிறவர்களுக்காக வும் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிட்ட வேதவசனத்திற்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் வித்தியாசமான கருத்துக்க ளும், மூலமொழியோடு சம்பந்தப்பட்ட விஷயங்களுமே உள் ளன. இதனால் இவற்றை வாசிக்காத நிலையிலும் புத்தகத்தின் செய்தியை நீங்கள் புரிந்துகொள்ளலாம்.

இந்நூல் பற்றிய உங்களுடைய கருத்துக்களையும், இதன்மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களையும் எமக்கு எழுதித் தெரிவியுங்கள். இந்நூலை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங் கள். இன்னும் அதிக புத்தகங்களை எழுதி வெளியிடுவதற்குத் தேவன் கிருபையளிக்கும்படி ஜெபியுங்கள்.

அன்புடன்,

எம்.எஸ்.வசந்தகுமார்



# 73ம் சங்கீதம்

1. சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார்.
2. ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும் என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று.
3. துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில் வீம்புக் காரராகிய அவர்கள்மேல் பொறாமை கொண்டேன்.
4. மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை; அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது.
5. நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள்; மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்.
6. ஆகையால் பெருமை சரப்பணியைப்போல் அவர்களைச் சுற்றிக்கொள்ளும்; கொடுமை ஆடையைப்போல் அவர்களை மூடிக் கொள்ளும்.
7. அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது; அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது.
8. அவர்கள் சீர்கெட்டுப் போய் அகந்தையாய்க் கொடுமை பேசுகிறார்கள்; இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள்.
9. தங்கள் வாய் வானமட்டும் எட்டப்பேசுகிறார்கள்; அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது.
10. ஆகையால் அவருடைய ஜனங்கள் இந்த வழியாகவே திரும்புகிறார்கள்; தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாய்ச் சுரந்து வரும்.
11. தேவனுக்கு அது எப்படித் தெரியும்? உன்னதமானவருக்கு அதைப் பற்றி அறிவு உண்டோ? என்று சொல்லுகிறார்கள்.
12. இதோ இவர்கள் துன்மார்க்கர்; இவர்கள் என்றும் சுக ஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்.
13. நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம் பண்ணி, குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன்.

14. நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்.

15. இவ்விதமாய்ப் பேசுவேன் என்று நான் சொன்னேனானால், இதோ, உம்முடைய பிள்ளைகளின் சந்ததிக்குத் துரோகியாவேன்.

16. இதை அறியும்படிக்கு யோசித்துப் பார்த்தேன்; நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து,

17. அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது.

18. நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர்.

19. அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்.

20. நித்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழிவதுபோல், ஆண்டவரே, நீர் விழிக்கும்போது, அவர்கள் வேஷத்தை இகழுவீர்.

21. இப்படியாக என் மனம் கசந்தது. என் உள்ளிந்திரியங்களில் குத்துண்டேன்.

22. நான் காரியம் அறியாத மூடனானேன்; உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன்.

23. ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர்.

24. உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.

25. பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை.

26. என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்.

27. இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப் போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச் சோரம் போகிற அனைவரையும் சங்கரிப்பீர்.

28. எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்; நான் உமது கிரியைகளையெல்லாம் சொல்லிவரும்படி கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.

## 73ம் சங்கீதத்திற்கான சுருக்கச்சட்டம்

### (1). இதயத்தின் பிரச்சினையில் அலுத்துக்கொண்ட உணர்வுகள் (சங்.73:1-15)

(அ). தேவன் நல்லவர் என்பதில் ஏதாவது உண்மை உள்ளதா? (சங்கீதம் 73:1-3)

(ஆ). துன்மார்க்கரின் வாழ்வில் ஆசீர்வாதத்தின் தன்மை உள்ளதா? (சங்கீதம் 73:4-12).

(இ). நீதிமானாக வாழ்வதில் ஏதாவது நன்மை உள்ளதா? (சங்கீதம் 73:13-15).

### (2). இறைவனின் பிரசன்னத்தில் அறிந்துகொண்ட உண்மைகள் (சங்.73:16-26)

(அ). துன்மார்க்கரின் இறுதிநிலையை அறிந்து கொண்டான் (சங்கீதம் 73:18-20)

(ஆ). துயரத்துடனிருந்த தன் நிலையை அறிந்து கொண்டான் (சங்கீதம் 73:21-22).


(அ). துணையாக எப்பொழுதும் இருப்பவரை அறிந்து கொண்டான் (சங்கீதம் 73:23-26).

### (3). முடிவுரை

ஆண்டவரின் அருகிலிருக்கும் நீதிமான்களின் நிம்மதியானவாழ்வு (சங்.73:27-28).

## அறிமுகவுரை

# துன்மார்க்கரின் வளமும்



# நீதிமானின் துயரமும்

## 73ம் சங்கீதம்

தேவனை அறியாத தீயவர்களான துன்மார்க்கர் உலகத்தில் செல்வச் செழிப்புடனும் இன்பத்துடனும் வாழ்வதைப் பற்றிய கேள்விகள், தேவபக்திமிக்க மனிதர்களின் உள்ளத்தில் இருப் பதை எவராலும் மறுக்கமுடியாது. தேவபயத்துடன் பரிசுத்தமாக

வும் நீதியாகவும் வாழும் தங்களுடைய வாழ்வில், பாடுகளும், துயரங்களும், வறுமையும் ஏற்படும்போது, தேவபக்தியற்ற மக்களுக்கு எப்படி செல்வமும் இன்பமும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது? என்னும் கேள்வி பல கிறிஸ்தவ பக்தர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இவ்வுலகம் தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதும், தேவன் சர்வவல்லமை உள்ளவராக இருப்பதும் உண்மையென்றால், அவர் துன்மார்க்கர் செல்வந்தராவதைத் தடுத்து, தம்மை நம்பி வாழும் மக்களை செல்வத்தினால் ஆசீர்வதிக்கவேண்டும் என்று கிறிஸ்தவ பக்தர்கள் எண்ணுகின்றனர். தேவன் துன்மார்க்கரைத் தண்டித்து, நீதிமான்களை ஆசீர்வதிக்கிறவர் என்பது உண்மை என்றால், துன்மார்க்கர் இவ்வுலகத்தில் செல்வச்செழிப்பில் வாழ்வதும், நீதிமான் துயரப்படுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம் என்பதே இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்களின் கருத்தாக உள்ளது.

தற்கால கிறிஸ்தவர்களைப் போலவே, வேதாகம கால மனிதர்களும் தேவபக்தியற்ற துன்மார்க்கர் சந்தோஷத்துடனும் செல்வத்துடனும் வாழ்வதைக் காணும்போது குழப்பமடைகிறவர்களாக இருந்தனர். பழைய ஏற்பாட்டிலுள்ள சங்கீதப் புத்தகத்தில் 37ம் 49ம் 73ம் சங்கீதங்கள் இத்தகைய கேள்விக்கான பதிலைக் கொண்டுள்ளன. 37ம் சங்கீதத்தில், துன்மார்க்கர் சிறிது காலம் செல்வச்செழிப்பில் வாழ்ந்தாலும் அவர்கள் சீக்கிரமாய் அழிந்து போவார்கள் என்பதனால், அவர்கள்மீது பொறாமையும் எரிச்சலும் அடையவேண்டாம் என்னும் ஆலோசனை நீதிமான்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. 49ம் சங்கீதத்தில், துன்மார்க்கர் மரிக்கும் போது, அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு எவ்விதத்திலும் உதவுவதில்லை என்னும் உண்மை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, நீதிமான்களுக்குத் தேவனுடன் நித்தியகாலமாக வாழக்கூடிய சிலாக்கியம் இருப்பதை அறியத்தருகின்றது. 73ம் சங்கீதம், துன்மார்க்கருடைய இறுதி நிலையையும், தேவனுடைய பிரசன்னத்தில் நீதிமான்கள் இருப்பதையும் சுட்டிக்காட்டி, துன்மார்க்கரின் வளத்தையும் நீதிமானின் துயரத்தையும் சரியான விதத்தில் பார்ப்பதற்கு உதவி செய்கிறது.

73ம் சங்கீதம் ஆசாப் என்பவரால் எழுதப்பட்டதாக இச்சங்கீதத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.[1] எருசலேம் நகரத்தில் ஆலயம் கட்டப்படுவதற்கு முன்பு,[2] இஸ்ரவேல் மக்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் தேவனை வழிபட்டு வந்த காலத்தில்,[3] ஆலய ஆராதனையில் பாடல்களுக்குப் பொறுப்பாயிருப்பதற்கு தாவீதினால்[4] நியமிக்கப்பட்ட "லேவி"[5] என்னும் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவனே இச்சங்கீதத்தை எழுதிய ஆசாப் என்னும் பக்தன் (1நாளா.6:31-32,39, 16:4-5, நெகே.12:46). தாவீதினுடைய காலத்தில் கர்த்தருடைய "உடன்படிக்கைப் பெட்டி"[6] எருசலேமுக்கு

---

[1] சங்கீதப் புத்தகத்தில் ஆசாப் எழுதிய 12 சங்கீதங்கள் உள்ளன. இவற்றில் 50ம் சங்கீதம் தனியாகவும், ஏனையவை (அதாவது 73 முதல் 82 வரையிலான சங்கீதங்கள்) ஒரு தொகுப்பாகவும் சங்கீதப் புத்தகத்தில் உள்ளன. 48ம் 49ம் சங்கீதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயமே ஆசாபின் சங்கீதமொன்றிலும் இருந்தமையால், இது ஆசாபின் ஏனைய சங்கீதங்களிலிருந்து வேறுபிரிக்கப்பட்டு, 50ம் சங்கீதமாக உள்ளது (M.J.Buss, "The Psalms of Asaph and Korah" pp. 382-392).

[2] கி.மு.966ல் எருசலேம் ஆலயத்தைக் கட்டத் தொடங்கிய சாலொமோன் கி.மு.959ல் அதைக் கட்டி முடித்தான் (1ராஜா.6:1, 6:37-38)

[3] இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் (கி.மு.1446ல்) அவர்கள் சீனாய் மலையில் இருக்கும் காலத்தில் ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்டது. அதன் பின்னர் எருசலேம் தேவாலயம் கட்டப்படும்வரை ஆசரிப்புக்கூடாரமே மக்கள் தேவனை வழிபடும் ஸ்தலமாக இருந்தது.

[4] தாவீது கி.மு.1010 முதல் கி.மு.970 வரை இஸ்ரவேலின் அரசனாக இருந்தான்.

[5] இஸ்ரவேல் மக்கள் பன்னிரண்டு கோத்திரங்களாக இருந்தனர். இவற்றில், தேவனை சேவிப்பதற்காக லேவி என்னும் கோத்திரம் தெரிவுசெய்யப்பட்டிருந்தது (எண்.3:12, 3:41, 3:45). லேவி கோத்திரத்தில் ஆரோன் என்பவனுடைய வம்சத்தினர் ஆசாரியர்களாகப் பணிபுரிவதற்காகத் தெரிவு செய்யப்பட்டனர் (யாத்.28:1). ஆரோனின் வம்சத்தைச் சேராத லேவியர்கள் அனைவரும் ஆசரிப்புக் கூடாரத்திலும், பிற்காலத்தில் ஆலயத்திலும், ஆசாரியப் பணி தவிர்த்த ஏனைய பணிகளைச் செய்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டனர் (எண்.18:1-7).

[6] கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி ஆரம்பத்தில் ஆசரிப்புக் கூடாரத்திலும் பிற்காலத்தில் சாலொமோன் கட்டிய ஆலயத்திலும் வைக்கப்பட்டது. இது தேவனுடைய பிரசன்னத்திற்கான அடையாளமாக, மக்கள் தேவனை சந்திக்கும் இடமாக இருந்தது. இப்பெட்டியில் தேவன் இஸ்ரவேல் மக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அடையாளமாக,

கொண்டுவரப்பட்டபோது, பாடகர் குழுவிற்குத் தலைவனாக ஆசாபே லேவியர்களினால் தெரிவு செய்யப்பட்டான் (1நாளா.15: 16-19). ஆசாபின் பிள்ளைகளும் ஆலயப் பாடகர்களாக இருந்த தோடு (1நாளா.25:1-31), பிற்காலத்தில் இவனுடைய வம்சத்தினர் இசைக் கருவிகளுடன் ஆலயத்தில் பாடல்களைப் பாடுகிறவர் களாக இருந்தார்கள் (2நாளா.35:15, எஸ்.3:10, நெகே.11:17, 11:22). ஆசாப் பாடகனாக மட்டுமல்ல, தீர்க்கதரிசியாகவும் இருந்துள்ளான் (1நாளா.25:1, 2நாளா.29:30, 35:15).

தாவீது எழுதிய சங்கீதங்களையும் ஆலய வழிபாடுகளில் ஆசாப் பாடியுள்ளான் (1நாளா.16:7). இதனால் சங்கீதப்புத்தகத்தில் ஆசாபின் சங்கீதங்களாகக் குறிப்பிடப்பட்டிருப்பவைகள் தாவீதி னாலேயே எழுதப்பட்டுள்ளதாகச் சில வேதஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.[7] பிற்காலத்தில் ஆசாபின் வம்சத்தினரும் ஆலயத் தில் பாடல்களைப் பாடுகிறவர்களாக இருந்தமையால் (எஸ்.2:41), இச்சங்கீதம் அவர்களில் ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம் என் றும் சிலர் கருதுகின்றனர்.[8] ஆனால், 2நாளாகமம் 29:30ல், ஆசாபும் சங்கீதங்களை எழுதியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருப்பத னால், ஆசாபின் பெயருடன் உள்ள சங்கீதங்கள் அவனாலேயே எழுதப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்கின்றோம்.[9] "தாவீதின்

---

அவ்வுடன்படிக்கையின் நிபந்தனைகளாகக் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணமும், மன்னா பாத்திரமும், துளிர்த்த கோலும் இருந்தன (யாத். 25:16, 40:20, உபா.10:5, 1ராஜா.8:9, யாத்.16:33-36, எபி.9:4).

[7] C.H.Spurgeon, *The Treasury of David (Updated Edition)*, p. 627.

[8] J.Eaton, *The Psalms: A Historical and Spiritual Commentary*, p. 265.

[9] 2நாளாகமம் 29:30ல் "தாவீதும் ஆசாபும் பாடின வார்த்தைகள்" என்பது, மூலமொழியில் "தாவீதும் ஆசாபும் எழுதியவைகள்" என்னும் அர்த்தத்துடனேயே உள்ளது. புதிய தமிழ் வேதாகமத்தில் "தாவீதினதும் தரிசனக்காரனான ஆசாபினதும் வார்த்தைகளால் கர்த்தரைத் துதிக்கும் படி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருவரும் சங்கீதங்களை எழுதியுள் ளார்கள் என்பதை அறிந்துகொள்ளக்கூடிய விதத்தில், திருவிவிலியத்தில் "தாவீதின் வார்த்தைகளிலும்... ஆசாபின் மொழிகளிலும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழிபெயர்ப்புகளில் to praise the LORD with the words of David and of Asaph (NIV) என்று இவ்வாக்கியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சங்கீதம்" என்னும் தலைப்புடன் இருப்பவை தாவீதினால் எழுதப் பட்டவைகளாக இருப்பதைப் போலவே, "ஆசாபின் சங்கீதம்" என்னும் தலைப்புடன் உள்ளவை ஆசாப் என்பவன் எழுதிய சங்கீதங்களாக உள்ளன.

73ம் சங்கீதம் எத்தன்மையுடைய பாடல் என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள் ளன.[10] சிலர் 73ம் சங்கீதத்தைத் "தனிப்பட்ட புலம்பலாகவும்,"[11] வேறு சிலர் இதைத் "தனிப்பட்ட நன்றி செலுத்தும் சங்கீதமாக வும்"[12] வியாக்கியானம் செய்துள்ளபோதிலும், இது ஞானசங்கீத மாகவே உள்ளது.[13] இத்தகைய சங்கீதங்கள், பழைய ஏற்பாட்டில் உள்ள நீதிமொழிகளைப்போல, மனிதருக்கு இவ்வுலக வாழ்வை ஆசீர்வாதமுள்ளதாகவும் நன்மையானதாகவும் அமைத்துக் கொள்ளக்கூடிய ஞானவழிகளைக் காண்பிக்கும் அறிவுறுத்தல் களைக் கொண்டுள்ள சங்கீதங்களாகும்.[14] தேவன் மீதான விசுவா சத்தைப்பற்றிய குறிப்புகள் அக்கால ஞானஇலக்கியங்களில் இடம்பெறவில்லை. இதனால், தேவனை நம்புகிற மனிதனான ஆசாப் என்பவனால் எழுதப்பட்டுள்ள இச்சங்கீதத்தை ஞானசங்கீ தமாகக் கருதமுடியாது என்று சிலர் கூறுகின்றனர்.[15] ஆனால்,

---

[10] சங்கீதப் புத்தகத்திலுள்ள 150 பாடல்களும் வித்தியாசமான தன்மை களைக் கொண்டவைகளாக உள்ளன. இது பற்றிய மேலதிக விளக்கத் திற்கு எனது "சங்கீதங்களின் சத்தியங்கள்" என்னும் நூலின் 9ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[11] C.Westerman, *Praise and Lament*, p. 53. சங்கீதப் புத்தகத்தில் மொத்தம் 58 புலம்பும் சங்கீதங்கள் உள்ளன. இவற்றில் 42 சங்கீதங்கள் தனிப்பட்ட மனிதர்களின் புலம்பல்களாகவும், ஏனையவை சமூகப் புலம்பல்களாகவும் உள்ளன. இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது "சங்கீதங்களின் சத்தியங்கள்" என்னும் நூலின் 9ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[12] A. Weiser, *Psalms: The Old Testament Library*, p. 89.S.Mowinckel, *The Psalms in Israel's Worship Volume 2*, p. 114.

[13] H.J.Kraus, *Theology of the Psalms*, p. 169; C.H.Bullock, *An Introduction to the Old Testament Poetic Books*, p. 136.

[14] சங்கீதங்கள் 1, 37, 49, 112, 127, 128 என்பன இத்தகைய ஞான சங்கீதங்களாகும் (C.H.Bullock, *An Introduction to the Old Testament Poetic Books*, p. 136).

[15] W.Brueggemann, *Psalms: A Theological Commentary*, pp. 115-116.

இஸ்ரவேல் மக்களைப் பொறுத்தவரை, கர்த்தருக்குப் பயப்படு தலே ஞானத்தின் ஆரம்பமாக இருப்பதனால் (நீதி.1:7), தேவன் மீதான விசுவாசத்துடன் எழுதப்பட்டுள்ள இச்சங்கீதம், இஸ்ர வேல் மக்களுடைய ஞானஇலக்கியத்தின் பாடலாகவே உள் ளது.[16] துன்மார்க்கர் இவ்வுலகில் செல்வச் செழிப்பில் வாழ்வதை யும், நீதிமான் துயரப்படுவதையும் ஆராய்ந்து பார்க்கும் ஞான சங்கீதமாக இது உள்ளது.

73ம் சங்கீதத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளன. முதல் 15 வச னங்களிலும், துன்மார்க்கரின் சுகபோகமான வாழ்வையும் நீதிமா னின் துயரத்தையும் பற்றி சங்கீதக்காரனின் இதயத்தில் இருந்த பிரச்சினையில் அலுத்துக்கொண்ட அவனுடைய உணர்வுகள் வெளிப்பட்டுள்ளன. ஏனைய வசனங்களில், அவன் தேவனுடைய பிரசன்னத்தில் அறிந்துகொண்ட உண்மைகள் குறிப்பிடப்பட்டுள் ளன. துன்மார்க்கரின் செழிப்பையும் நீதிமானின் துயர நிலையை யும்பற்றி மனக்குழப்பத்துடன் இருந்த சங்கீதக்காரன், ஆலயத்திற் குச் சென்று, தேவனுடைய பிரசன்னத்தில் தனது மனக்குழப்பம் நீங்கியவனாக, தேவனை முழுமையாக நம்பத்தொடங்கினான்.


கிறிஸ்தவர்களாகிய நாமும் சங்கீதக்காரனைப் போலவே துன் மார்க்கரின் வளமான வாழ்வைக் கண்டு அவர்கள்மீது பொறாமை யும் (சங்.73:3), நம்முடைய வாழ்க்கையில் இருக்கும் குறைவுக ளை எண்ணித் துயரமும் அடைகின்றோம் (சங்.73:14). மற்றவர்க ளுடைய வாழ்க்கையைப் பார்த்து மனக்குழப்பமடையாமல் இருப்பதற்கு, சங்கீதக்காரனைப்போல நாமும் தேவனுடைய பிரசன்னத்தில், குறிப்பாக அவருடைய வார்த்தையின் வெளிச்சத் தில் நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதற்கு, 73ம் சங்கீதம் நமக்கு உதவிசெய்கிறது. எனவே, இச்சிறு நூலில், இச்சங்கீதத்தை ஆராய்ந்து பார்த்து, தேவன் இதன் மூலம் நமக்கு கற்பிக்கும் ஆவிக்குரிய சத்தியங்களை அறிந்துகொள்வோம்.

---

[16] B.W.Anderson, *Out of the Depths: Psalms Speak for Us Today*, p. 218.

முதலாம் அத்தியாயம்

# இதயத்தின் பிரச்சினையில்



# அழுத்துக்கொண்ட உணர்வுகள்

## சங்கீதம் 73:1-15

சங்கீதங்கள் மனித மனதின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்களாக உள்ளன. சங்கீதங்களை எழுதியவர்கள், தங்களுடைய வாழ்வுச் சூழலை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய மனதில் எழுந்த உணர்வுகளைக் கவிதை நடையில் பாடல்களாகச் சங்கீதப் புத்தகத்தில் எழுதியுள்ளனர். சங்கீதங்

களை எழுதியவர்களுடைய வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் முக்கியமான பாடம் அவர்களுடைய நேர்மையாகும். அவர்கள் தங்களுடைய உள்ளத்தின் உணர்வுகளை மறைக்காமல், தங்களுடைய சிந்தனைகள், சந்தேகங்கள், கேள்விகள், குழப்பங்கள், கோபங்கள் என்பவற்றைத் தங்களுடைய பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். தாங்கள் பரிசுத்தவான்கள் என்பதனால், தங்களுடைய வாழ்வில் எவ்வித தவறும், குறைவும் இல்லை என்னும் எண்ணம் மற்றவர்களுக்கு ஏற்படும் விதத்தில் அவர்கள் தங்களைப் பற்றி உயர்வாக எழுதவில்லை. அவர்கள், தங்களுடைய அன்றாட வாழ்வுச் சூழலில் எத்தகைய கஷ்டங்களுடனும், கவலைகளுடனும், போராட்டங்களுடனும் வாழ்ந்தார்களோ, அவற்றை எவ்வித ஒளிவுமறைவும் இல்லாமல் வெளிப்படையாக எழுதியுள்ளனர். உண்மையில், இத்தகைய நேர்மை, கிறிஸ்தவர்களாகிய நமக்கு அவசியமானது. நாம், நம்முடைய நிஜமான நிலையை மறைத்து, போலித்தனமாக மாய்மாலம் பண்ணுகிறவர்களாக இருக்கக்கூடாது.

73ம் சங்கீதத்தை எழுதிய பக்தன், “வறுமையான சூழ்நிலையில்”[1] இருந்தான். இதனால், துன்மார்க்கருடைய வாழ்க்கை செல்வச் செழிப்பில் வளமுடனும், சுகத்துடனும், இன்பத்துடனும் இருப்பது அவனுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது. தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளின்படி வாழும் தன்னுடைய வாழ்வில் இல்லாத பொருளாதார ஆசீர்வாதங்கள், தேவனைத் தேடாத துன்மார்க்கருக்கு இருப்பதைக் கண்டு குழப்பமடைந்த அவனுடைய இதயம், மூன்று கேள்விகளினால் தாக்கப்பட்டிருந்தது. 73ம் சங்கீதத்தின் முதல் பகுதி, அதாவது 1 முதல் 15 வரையிலான வசனங்கள், சங்கீதக்காரனைத் தாக்கிய இம்மூன்று கேள்விகளையும் பற்றிய புலம்பல்களாக உள்ளன. இம்மூன்று கேள்விகளும் இவ்வத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளன.

---

[1] J.Flanigan, *Psalms: Ritchie Old Testament Commentaries*, p. 315. இச்சங்கீதத்தை எழுதியவர் வறுமையில் இருந்துள்ளார் என்பதற்கான ஆதாரங்கள் இச்சங்கீதத்தின் 14ம் 26ம் வசனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தில் உள்ளன.



## (1). தேவன் நல்லவர் என்பதில் ஏதாவது உண்மை உள்ளதா? (சங்கீதம் 73:1-3)

தேவபக்தியுள்ள மனிதன் துயரப்படும்போது, தேவன் உண்மையிலேயே தன் வாழ்வில் நல்லவராக இருக்கின்றாரா என்னும் கேள்வி அவனுடைய உள்ளத்தில் உருவாகுவதைத் தவிர்க்க முடியாது. தேவன் மற்றவர்களுக்கு நல்லவராக இருந்தாலும், தன்னுடைய வாழ்வில் அவர் நல்லவராக இல்லையே என்னும் எண்ணமே அவனுக்கு ஏற்படும். தேவன் உண்மையிலேயே நல்லவராக இருந்தால், தன்னுடைய வாழ்வில் ஏன் துயரமும் தீமையுமான காரியங்கள் ஏற்படுகின்றன என்னும் எண்ணத்தில் அவனுடைய இதயம் குழப்பமடைந்த நிலையிலேயே இருக்கும். 73ம் சங்கீதத்தை எழுதிய பக்தனும் இதேவிதமான குழப்பத்துடனேயே இருந்தான். தேவன் மற்றவர்களுக்கு நல்லவராயிருக்கின்றார், ஆனால் என்னுடைய வாழ்வில் அவர் நல்லவராக இல்லை என்னும் எண்ணத்துடன் அவன் 73ம் சங்கீதத்தை ஆரம்பித்துள்ளான்.

> சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத்
> தேவன் நல்லவராகவே இருக்கிறார் (சங்கீதம் 73:1).
> ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும்,
> என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று
> (சங்கீதம் 73:2).

முதலாம் வசனத்தில் "சுத்த இருதயம்" என்னும் சொற்பிரயோகம், "தேவனுக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட இருதயம்"[2] என்னும் அர்த்தமுடையது. தேவன் இஸ்ரவேல் மக்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்பவனுக்கு அவர் நல்லவராக இருக்கின்றார் என்பது அக்கால இஸ்ரவேல் மக்களுடைய நம்பிக்கை

[2] D.Kidner, *Psalms 73-150: Tyndale OT Commentaries*, p. 259.

யாக இருந்தது (லேவி.26, உபா.28-30).[3] தேவன் இஸ்ரவேல ருக்கு நல்லவராக இருக்கின்றார் என்பதை சங்கீதக்காரன் அறிந்திருந்தபோதிலும், தேவனுக்குப் பயந்து அவருடைய கட்ட ளைகளின்படி வாழ்ந்த நீதிமான்கள் அல்ல, அவருக்கு எதிரான துன்மார்க்கரே உலகில் ஆசீர்வாதமாக வாழ்வதை அவன் கண்டான். இதனால், தேவபக்திமிக்க ஜனங்களுக்கு அவர் நல்லவராக இருக்கின்றார் என்னும் நம்பிக்கையில் அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. தேவன் உண்மையிலேயே நல்லவராக இருந்தால், அவர் துன்மார்க்கரை அல்ல, நீதிமான்களையே செல்வச் செழிப்பில் ஆசீர்வாதமாக வைத்திருக்க வேண்டும் என்று அவன் எண்ணினான்.

இரண்டாம் வசனத்தில், "கால்களின் தள்ளாடுதல்" "அடிகளின் சறுக்குதல்" என்னும் சொற்பிரயோகங்கள், தேவன்மீது சங்கீதக் காரன் வைத்திருந்த நம்பிக்கையில் ஏற்பட்ட தளர்ச்சியை அல்லது பலவீனத்தைக் குறிப்பிடும் விவரணங்களாகும். "சற்றே தப்பிற்று" என்னும் வார்த்தைகள், சங்கீதக்காரன் விழாமல் இருந்துள்ளான் என்னும் எண்ணத்தை நமக்கு ஏற்படுத்தலாம். ஆனால் மூலமொழியின்படி, தேவன் நல்லவர் என்பதைப் பற்றிய சங்கீதக்காரனின் நம்பிக்கையில் தளர்ச்சி அல்லது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதையே இவ்வசனம் அறியத்தருகின்றது. திருவிவிலி யத்தில் இவ்வசனம் "என் கால்கள் சற்றே நிலை தடுமாறலாயின. நான் அடிசறுக்கி விழப்போனேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

[3] துன்மார்க்கர் செல்வச் செழிப்புடன் சுகபோகமாக வாழ்வதைக் கண்டு குழப்பமடைந்திருந்த சங்கீதக்காரன், தன்னுடைய மனக்குழப்பம் தீர்ந்த பின்னர் தேவனைப் பற்றி அறிந்துகொண்ட உண்மையை முதலாம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். இதன்படி, முழுச் சங்கீதமும் எழுதப்பட்ட பின்பே முதலாம் வசனம் எழுதப்பட்டுள்ளது (H.C.Leupold, *Exposition of the Psalms*, p. 524). ஆனால், இக்கருத்து இரண்டாம் வசனத்தை முரண்படுத்துவதாக உள்ளது. தேவன் நல்லவர் என்பதை ஆரம்பத்திலேயே சங்கீதக்காரன் அறிந்திருந்ததினாலேயே அவன் துன்மார்க்கரின் வளமான வாழ்வைக் கண்டபோது, தேவனைப் பற்றிய நம்பிக்கையில் அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு நல்லவராக இருந்தாலும், தன்னுடைய வாழ்வில் அவர் உண்மையிலேயே நல்லவராக இருக்கின்றாரா? என்னும் சந்தேகம் சங்கீதக்காரனுக்கு ஏற்பட்டது. புதிய தமிழ் வேதாகமத்தில் இதைத் தெளிவாக அறியத்தரும் விதத்தில் முதலிரு வசனங்களும் பின்வருமாறு மொழிபெயர்க்கப் பட்டுள்ளது:

நிச்சயமாக இஸ்றாயேலருக்கு
இறைவன் எவ்வளவு நல்லவர்.
இருதயத்தில் சுத்தமுள்ளவர்களுக்கு
அவர் எவ்வளவு நல்லவர்.
ஆனாலும் என்னைப் பொறுத்தமட்டில்
என் கால்கள் சறுக்கி விழப்போயின.
என் காலடிகள் இடறி,
நான் விழப்போனேன்

(புதிய தமிழ் வேதாகமம், சங்கீதம் 73:1-2).

துன்மார்க்கர் செல்வச் செழிப்பில் சுகபோகமாக வாழ்கிறார்கள் என்பதைக் கண்ட சங்கீதக்காரனுடைய ஆவிக்குரிய வாழ்வில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. இதைப் பற்றி அவன் மூன்றாம் வசனத் தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

துன்மார்க்கரின் வாழ்வை
நான் காண்கையில்
வீம்புக்காரராகிய அவர்கள்மேல்
பொறாமை கொண்டேன் (சங்கீதம் 73:3).

வறுமையில் வாழ்ந்த சங்கீதக்காரனுக்குப் பொறாமை ஏற்படும் விதத்தில், துன்மார்க்கரின் வாழ்வு செல்வச் செழிப்புடன் இருந் தது. இவர்களின் செல்வச் செழிப்பான சுகபோக வாழ்வைக் காணும்போது, தேவன் தன்னுடைய வாழ்வில் நல்லவராக இல்லையே என்னும் எண்ணம் சங்கீதக்காரனுக்கு ஏற்பட்டது. தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளின்படி வாழும் போது துயரங்கள் ஏற்பட்டால், தேவன்மீதான நம்பிக்கை தளர்ந்து போவது பலரது அனுபவமாக உள்ளது. இத்தகைய

சந்தர்ப்பங்களில், தேவன் நம்மை நியாயமான முறையில் நடத்த வில்லை என்று புலம்புகிறவர்களாகவே நாமும் இருக்கின்றோம்.



## (2). துன்மார்க்கரின் வாழ்வில் ஆசீர்வாதத்தின் தன்மை உள்ளதா? (சங்கீதம் 73:4-12)

தேவபக்தியற்ற மக்கள் செல்வச் செழிப்புடன் சுகமாக வாழ்வ தைக் கண்ட சங்கீதக்காரன், துன்மார்க்கரின் வாழ்வில்தான் ஆசீர்வாதத்தின் தன்மை உள்ளதா? என்றும் அலுத்துக் கொண் டான். இதனால், முதலாம் சங்கீதத்தின் வார்த்தைகள் அவனால் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக இருந்திருக்கும். அச்சங்கீதத் தில் துன்மார்க்கர் காற்றுப் பறக்கடிக்கும் பதரைப் போலவும், நீதிமான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலவும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (சங்.1:3-4). ஆனால், 73ம் சங்கீதத்தை எழுதிய பக்தனுக்கோ, நீதிமான் பதரைப் போலவும், துன்மார்க்கர் கனிதரும் மரங்களைப் போலவும் இருப்பதாகத் தென்பட்டனர். இதனால், துன்மார்க்கரின் வாழ்வில்தான் ஆசீர்வா தம் உள்ளதா? என்று அவன் மனம் குழம்பிப் போயிருந்தது.

73ம் சங்கீதத்தில் 4 முதல் 12 வரையிலான வசனங்களில் துன்மார்க்கரின் வாழ்வில் தான் கண்டவற்றை சங்கீதக்காரன் விபரமாக எழுதியுள்ளான்.[4] துன்மார்க்கரைப்பற்றி சங்கீதக்காரன் இவ்வசனங்களில் குறிப்பிட்டுள்ளவைகள் நூற்றுக்குநூறு வீதம் உண்மையான விவரணம் அல்ல என்று சில வேதஆராய்ச்சியா ளர்கள் கருதுகின்றனர். இதற்குக் காரணம், சங்கீதக்காரன் தூரத்தில் இருந்து துன்மார்க்கருடைய வாழ்க்கையைக்

---

[4] யோபு 21:7-15ல் யோபு குறிப்பிட்டுள்ளவைகளுக்கும், சங்கீதக்காரன் இவ்வசனங்களில் எழுதியுள்ளவற்றிற்கும் இடையில் பல ஒற்றுமைகள் இருப்பதை நாம் காணலாம். துயர காலத்தில் யோபுவும் சங்கீதக்காரனும் ஒரேவிதமான மனநிலையிலேயே துன்மார்க்கரைப் பார்த்துள்ளனர்.

கவனித்துப் பார்த்து அவர்களைப் பற்றி எழுதியுள்ளானே தவிர, அவன் அவர்களுடைய உண்மையான நிலையை அறியாதவனாகவே இருந்துள்ளான் என்று இவர்கள் கூறுகின்றனர்.[5] இது உண்மை என்றாலும், துன்மார்க்கருடைய வாழ்வு சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ள விவரணங்களை முரண்படுத்தும் விதத்தில் இருக்கவில்லை. அவன், அவர்களுடைய வாழ்வை நன்றாகக் கவனித்துப்பார்த்தே அவர்களைப்பற்றி எழுதியுள்ளான்.

சங்கீதக்காரனுடைய பார்வையில் துன்மார்க்கருடைய வாழ்வு துயரங்கள் அற்றதாக இருந்தது. 4ம் 5ம் வசனங்களில் அவன் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளான்:

> மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை.
> அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது
> (சங்கீதம் 73:4).
> நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள்.
> மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்
> (சங்கீதம் 73:5).

நான்காம் வசனத்திலுள்ள "மரணபரியந்தம்" என்னும் சொற்பிரயோகம் சர்ச்சைக்குரியதொன்றாகும். தற்காலத்தில் வெளிவரும் பெரும்பாலான வேதாகமங்களில் இச்சொற்பிரயோகம் இல்லை.[6] ஏனையவற்றில் "மரணத்திலும் அவர்களுக்கு வேதனைகள் இல்லை" என்னும் அர்த்தத்துடன் நான்காம் வசனத்தின் முதல் வாக்கியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[7] அதாவது, துன்மார்க்கர் மரிக்கும்போது அவர்கள், வியாதி, முதுமை ஆகியவற்றின் வேதனைகள் இல்லாத நிலையில் இவ்வுலக வாழ்வை முடித்துக்

---

[5] J.L.Crenshaw, *The Psalms: An Introduction*, p. 119.

[6] ஆங்கிலத்தில் NIV, NRSV, போன்ற வேதாகமங்களில் இச்சொற்பிரயோகம் இல்லை.

[7] தமிழில் மோனஹன் என்பவர் மொழிபெயர்த்த வேதாகமத்தில் "மரணத்திலும் அவர்களுக்கு கஷ்டமில்லை" என்றும், திருவிவிலியத்தில், "அவர்களுக்குச் சாவின் வேதனை என்பதே இல்லை" என்றும் இவ்வாக்கியம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் NKJV, NASB போன்ற வேதாகமங்களில் இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கொள்கின்றனர் என்னும் அர்த்தத்தில் இவ்வாக்கியம் உள்ளது. மரணம் அவர்களுக்கு வேதனைகள் எதுவும் இல்லாத அனுபவ மாகவே உள்ளது.

4ம் வசனத்தில், மரணத்தைப்பற்றிய குறிப்பு பழைய ஏற்பாட்டின் "மெசோரெட்டிக் பிரதிகள்" என்று அழைக்கப்படும் வேதப்பிரதி யை அடிப்படையாகக் கொண்டது.[8] எனினும், மரணத்தைப் பற்றிய குறிப்பு இல்லாத நிலையில் இவ்வாக்கியத்தை மொழி பெயர்ப்பதே சரியானது என்று வேதஆராய்ச்சியாளர்கள் கூறு கின்றனர்.[9] எனவே, துன்மார்க்கருக்கு இவ்வுலகில் எவ்வித துயரங்களும் இல்லை என்றே நான்காம் வசனத்தின் முதல் வாக்கியத்தில் சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான். இதனால், புதிய தமிழ் வேதாகமத்தில், "அவர்களுக்குப் போராட்டங்களே இல்லை" என்று இவ்வாக்கியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

உலக வாழ்வில் துயரங்களை அனுபவிக்காத துன்மார்க்கரின் சரீரம் எப்பொழுதும் ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் இருப்ப தாக நான்காம் வசனத்தின் இரண்டாவது வாக்கியத்தில் சங்கீதக் காரன் குறிப்பிட்டுள்ளான். மூலமொழியின்படி இவ்வாக்கியம் "அவர்கள் சரீரம் கொழுப்பாயிருக்கிறது" என்னும் அர்த்தமுடை யது.[10] எனினும் இது, "செல்வச் செழிப்பில் ஆரோக்கியமாக இருப்பதைக் குறிப்பிட அக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட ஒரு சொற்பிரயோகமாகும்."[11] இதனால், தற்காலத்தில் வெளிவரும் வேதாகமங்கள் இவ்வாக்கியத்தை "அவர்களுடைய சரீரம் ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் இருக்கின்றது" என்றே மொழி பெயர்த்துள்ளன. ஆங்கில-தமிழ் இணைவேதாகமத்தில் "மனிதர் பெறும் நோய்களை அடையார்கள்" என்று இவ்வாக்கியம் குறிப்பிடப்பட்டுள்ளது. "அவர்களுடைய உடல்கள் ஆரோக்கியமா

---

[8] NIV வேதாகமத்தில் இவ்வசனத்திற்கான அடிக்குறிப்பைப் பார்க்கவும்.
[9] M.Dahood, *Psalms 51-100: Anchor Bible Commentary*, p. 189.
[10] NASB மொழிபெயர்ப்பில், And their body is fat என்று இவ்வாக்கியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
[11] M.E.Tate, *Psalms 51-100: Word Biblical Commentary Vol. 20*, p. 228.

கவும் பலமாகவும் இருக்கின்றன" என்று புதிய தமிழ் வேதாகமம் கூறுகிறது.

வியாதிகள், கஷ்டங்கள், துன்பங்கள் என்பன மானிட வாழ்வில் வருவது சகஜமே. ஆனால், இத்தகைய துயரங்கள் துன்மார்க்கரு டைய வாழ்வில் இல்லை என்று 5ம் வசனத்தில் சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான். திருவிவிலியத்தில் இவ்வசனம், "மனிதப் பிறவிகளுக்குள்ள வருத்தம் அவர்களுக்கு இல்லை. மற்ற மனிதர்களைப்போல் அவர்கள் துன்புறுவதில்லை" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "மானிட பாவத்தின் தண்டனையாக வந்த துயரங்கள்கூட துன்மார்க்கருடைய வாழ்வில் இருப்பதாகச் சங்கீதக்காரனுக்குத் தென்படவில்லை."[12] மனிதன் தேவ கட்ட ளையை மீறிப் பாவம் செய்தமையால், "உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனைப் புசிப்பாய்... உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்" (ஆதி.3:17-19) என்று தேவன் அறிவித்திருந்தார். ஆனால், துன்மார்க்கரு டைய வாழ்வு இத்தண்டனைக்கு உட்படாததாகச் சங்கீதக்கார னுக்குத் தென்பட்டது. மானிட வாழ்வில் இருக்கும் சாதாரண துயரங்களைக்கூட அனுபவிக்காத நிலையில், அவர்களுடைய வாழ்வு இருந்தது. அவர்கள் எவ்வித கஷ்டமும் இல்லாமல் தங்களுடைய வாழ்வுக்கு அவசியமான அனைத்தையும் பெற்று வந்தனர். "அவர்களுடைய செல்வம், செல்வாக்கு, அதிகாரம் என்பன அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் எவ்வித சிரமமும் இன்றி அவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தன."[13]

துன்மார்க்கர் எவ்வித கஷ்டமும் இல்லாமல் தங்களுடைய செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதனால் அவர்கள் தங்களு டைய செல்வத்தில் பெருமிதங்கொள்ளுகிறவர்களாக இருந்தனர். எனினும் அவர்கள் அநியாயமான முறையிலேயே தங்களுடைய செல்வத்தைச் சேர்த்திருந்தனர். சங்கீதக்காரன் 6ம் வசனத்தில் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளான்.

---

[12] W.A.VanGemeren, *Psalms: Expositor's Bible Commentary,* p. 478.
[13] J.Phillips, *Exploring the Psalms Volume One*, p. 606.

ஆகையால் பெருமை சரப்பணியைப்போல்
அவர்களைச் சுற்றிக்கொள்ளும்.
கொடுமை ஆடையைப்போல்
அவர்களை மூடிக்கொள்ளும் (சங்கீதம் 73:6).

"சரப்பணி" என்பது கழுத்தில் அணியும் ஆபரணமாகும் (ஆதி. 41:42). புதிய தமிழ் வேதாகமத்தில் "கழுத்துச் சங்கிலி" என்றும், ஆங்கில-தமிழ் இணைவேதாகமத்தில் "கழுத்து நகை" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில், செல்வந்தரின் வாழ்வில் இது பெருமையின் அடையாளமாக இருந்தது. ஆனால், இங்கு பெருமையே துன்மார்க்கரின் கழுத்தணியாக இருப்பதாக சங்கீதக் காரன் குறிப்பிட்டுள்ளான். துன்மார்க்கர் பெருமை பிடித்தவர்கள் என்பதே இவ்வாக்கியத்தின் அர்த்தமாகும். உண்மையில், "அவர்கள் தங்களுடைய பெருமையில் பெருமிதங்கொள்ளுகிற வர்களாக இருந்தனர்."[14]

"பெருமை" துன்மார்க்கருடைய கழுத்தைச் சுற்றியிருந்தாலும், "கொடுமையோ" அவர்களுடைய முழு சரீரத்தையும் சுற்றியிருப்ப தாகச் சங்கீதக்காரன் 6ம் வசனத்தின் இரண்டாவது வாக்கியத் தில் குறிப்பிட்டுள்ளான். துன்மார்க்கர் கொடுமையான செயல்க ளின் மூலமே, அதாவது, மற்றவருக்கு தீமைகள் செய்வதன் மூலமே, தங்களுடைய செல்வத்தைப் பெருக்கினார்கள். அவர் கள் சட்டத்தையும் மனிதர்களையும் மதிக்காதவர்களாகவும், மற்றவர்களுக்கு அநீதியும் கொடுமையும் செய்கிறவர்களாக்வும் இருந்தனர். "மற்றவர்களை ஒடுக்கி, அவர்களுக்கு உரியவற்றை அபகரித்துக்கொள்ளக் கூடிய உரிமை தங்களுக்கு இருக்கின்றது என்னும் எண்ணத்தில் அவர்கள் நடந்துகொண்டனர்."[15] இதனால் அவர்கள் செல்வச் செழிப்பில் வாழ்ந்துவந்தனர். இதைப்பற்றி சங்கீதக்காரன் 7ம் வசனத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்.

அவர்கள் கண்கள் கொழுப்பினால்
எடுப்பாய்ப் பார்க்கிறது

---

[14] J.Flanigan, *Psalms: Ritchie Old Testament Commentaries*, p. 315.
[15] C.H.Spurgeon, *The Treasury of David*, p. 630.

அவர்கள் இருதயம் விரும்புவதிலும்
அதிகமாய் நடந்தேறுகிறது (சங்கீதம் 73:7).

வேதாகமக் காலத்தில் "கொழுப்பு" என்னும் பதம் எதிரிடையான அர்த்தத்துடன் மட்டும் உபயோகிக்கப்படவில்லை. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய ஆசீர்வாதத்தையும் செல்வச் செழிப்பையும் குறிப்பிடும் விவரணமாகவும் இப்பதம் இருந்தது.[16] எனவே, துன்மார்க்கருடைய கண்கள் செல்வச் செழிப்பினால் எடுப்பான பார்வையுடன் இருப்பதாகவே சங்கீதக்காரன் இவ்வசனத்தின் முதல் வரியில் குறிப்பிட்டுள்ளான்.

7ம் வசனத்தின் இரண்டாவது வாக்கியம் மூலமொழியின்படி, "துன்மார்க்கருடைய இருதயத்தின் எண்ணங்களுக்கு வரையறையே இல்லை" என்னும் அர்த்தமுடையது. புதிய தமிழ் வேதாகமத்தில் இவ்வாக்கியம், "அவர்கள் மனங்களில் இருந்து எழும் தீமையான, அகந்தையுள்ள எண்ணங்களுக்கு அளவேயில்லை" என்று மூலமொழிக்கு ஏற்றவிதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "எப்படி தங்களுடைய செல்வத்தைப் பெருக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்த துன்மார்க்கருடைய இதயத்தின்

[16] மூலமொழியில் தேவனுடைய ஆசீர்வாதத்தைக் குறிப்பிட கொழுப்பு என்னும் பதம் உபயோகிக்கப்பட்டுள்ளதை ஆதியாகமம் 27:28, யோபு 36:16, சங்கீதம் 36:8, 63:5, 65:11, 92:15, ஏசாயா 30:23, எரேமியா 31:14 போன்ற வசனங்களில் நாம் காணலாம். நாட்டின் சிறந்த வளமான பகுதி 'கொழுப்புப்பகுதி' என்று ஆதியாகமம் 45:18ல் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் கொழுப்பு என்னும் பதத்தை எல்லா வசனங்களிலும் நேரடியாகக் குறிப்பிடவில்லை. நாம் உபயோகிக்கும் தமிழ் வேதாகமத்தில் கொழுப்பு என்பது பல இடங்களில் "கொழுமை" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு மிருகப் பலியில் கொழுப்பே சிறப்பான பகுதியாகக் கருதப்பட்டது (ஆதி.4:4, லேவி.3:16). "திமிர்" "கலகம்" என்னும் குணங்களைக் குறிப்பிடவும் கொழுப்பு என்னும் பதம் வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள போதிலும் (உபா.31:20, 32:15, நெகே.9:25, நியாயா.3:17, யோபு. 15:27, சங்.119:70, ஏசா.6:10, எரே.5:28), இப்பதம் நேரடியான அர்த்தத்துடன் தேவனுடைய ஆசீர்வாதத்தையும் வளமான வாழ்வையும் குறிப்பிடும் உருவகமாகவும் உள்ளது (L.Ryken, J.C.Wilhoit & T.Longman ed., *Dictionary of Biblical Imagery*, p. 273).

எண்ணங்களுக்கு வரையறைகள் எதுவும் இருக்கவில்லை."[17] இதனால், அவர்களுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகளும் எல்லைமீறிச் செல்கிறவைகளாகவே இருந்தன. 8ம் வசனத்தில் சங்கீதக்காரன் இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளான்:

அவர்கள் சீர்கெட்டுப் போய்
அகந்தையாய்க் கொடுமை பேசுகிறார்கள்.
இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள் (சங்கீதம் 73:8).

துன்மார்க்கர் தங்களுடைய செல்வத்தைப் பெருக்குவதற்கான வழிகளைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதனால் அவர்கள் மற்றவர்களைப் பரியாசம்பண்ணி, தீமையான காரியங்களைப் பேசுவதோடு, மற்றவரை ஒடுக்குவதைப் பற்றி அச்சுறுத்துகின்றனர் என்பதே மூலமொழியின்படி இவ்வசனத்தின் அர்த்தமாகும். புதிய தமிழ் வேதாகமத்தில் இவ்வசனம் பின்வருமாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது:

அவர்கள் ஏளனம் செய்து
விஷமத்தனமாய்ப் பேசுகிறார்கள்.
அவர்கள் தமது அகங்காரத்தில்
அடக்கி ஒடுக்கப்போவதாகப் பயமுறுத்துகிறார்கள்
(புதிய தமிழ் வேதாகமம், சங்கீதம் 73:8).

துன்மார்க்கர் மனிதர்களுக்கு எதிராக மட்டுமல்ல, தேவனுக்கு எதிராகவும் பேசுகிறவர்களாக இருந்தனர். 9ம் வசனத்தில் சங்கீதக்காரன் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

தங்கள் வாய் வானமட்டும் எட்டப் பேசுகிறார்கள்
அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது
(சங்கீதம் 73:9).

"தங்கள் வாய் வானமட்டும் எட்டப் பேசுகிறார்கள்" என்னும் வாக்கியத்தில் "வானமட்டும் எட்ட" என்பது மூலமொழியில் "வானத்திற்கு எதிராக" என்றே உள்ளது. திருவிவிலியத்தில்

---

[17] W.W.Wiersbe, *Be Worshipful: Psalms 1-89*, pp. 238-239.

இவ்வாக்கியம், "விண்ணுலகை எதிர்த்து அவர்கள் வாய் பேசுகிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[19] இங்கு "வானம்" என்னும் வார்த்தை, தேவன் வாசமாயிருக்கும் பரலோகத்தைக் குறிப்பிடும் விவரணமாகும். துன்மார்க்கர் தேவனுக்கு எதிராகப் பேசுகிறார்கள் என்பதே இவ்வாக்கியத்தின் அர்த்தமாகும். பிறரை எவ்வாறு நடத்த வேண்டும் என்று வேதாகமத்தில் தேவன் கொடுத்துள்ள கட்டளைகளுக்கு எதிராகவே துன்மார்க்கர் மற்றவர்களை நடத்துகின்றனர். இதனால், மற்றவர்களை ஒடுக்குவதைப்பற்றிய அவர்களுடைய பேச்சுக்கள் தேவனுக்கு எதிரானவைகளாகவே உள்ளன.

துன்மார்க்கர் மற்றவரை ஒடுக்கி தங்களுடைய செல்வத்தை அதிகரிப்பதைப்பற்றி திட்டமிடும்போது, "முழு உலகமும் தங்களுடையது என்னும் எண்ணத்தில் பேசுகிறவர்களாக இருந்தனர்."[20] 9ம் வசனத்தின் இரண்டாவது வரி, அதாவது "அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது" என்னும் வாக்கியத்தின் அர்த்தம் இதுவாகும். புதிய தமிழ் வேதாகமத்தில் இவ்வாக்கியம், "அவர்களுடைய நாவுகள் பூமியை உடைமையாக்கிக்கொள்கின்றன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், தேவனை அறிந்த மக்களும் துன்மார்க்கரின் வார்த்தைகளிலும், அவர்களிடமிருக்கும் செல்வங்களிலும் மயங்கி, துன்மார்க்கரின் வழிகளில் சென்றுவிடுகின்றனர். இதைப்பற்றி 10ம் வசனத்தில் சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான்:

ஆகையால் அவருடைய ஜனங்கள்
இந்த வழியாகவே திரும்புகிறார்கள்.
தண்ணீர்கள் அவர்களுக்குப்
பரிபூரணமாய்ச் சுரந்து வரும் (சங்கீதம் 73:10).

இவ்வசனத்தில் "அவருடைய ஜனங்கள்" தேவனுடைய ஜனங்களையே குறிக்கின்றது. 9ம் வசனத்தில் தேவனையே "வானம்"

[19] ஆங்கிலத்தில் NKJV, NRSV, NASB என்னும் மொழிபெயர்ப்புகளில் இவ்விதமாகவே இவ்வசனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[20] A.P.Ross, *Psalms: The Bible Knowledge Commentary OT*, p. 847.

என்கிற வார்த்தையால் சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான். எனவே, இதனைத் தொடர்ந்து வரும் 10ம் வசனத்தில் "அவர்" என்பது தேவனையே குறிக்கின்றது. மூலமொழியில், "இந்த வழியாகவே திரும்புகிறார்கள்" என்பது, தேவனுடைய ஜனங்கள் துன்மார்க்க ருடைய செல்வத்தைக் காணும்போது, அவர்களும் துன்மார்க்க ரின் பக்கமாகவே திரும்புகிறார்கள் என்னும் அர்த்தமுடையது.[21] இதனால், புதிய தமிழ் வேதாகமத்தில் "ஆகையால் மக்களும் அவர்களிடமாய்த் திரும்பி" என்று 10ம் வசனத்தின் முதல் வாக்கியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

துன்மார்க்கரின் வழி தீமையானதாக இருந்தாலும், செல்வத்தின் மீதான ஆசை, நீதிமான்களையும் தீமையான வழியில் செல்வ தற்குத் தூண்டுகிறது. பவுல் இதைப்பற்றி எழுதும்போது, "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனை களாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" (1தீமோ.6:10) என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, பண ஆசையைக் குறித்து கிறிஸ்தவர்களாகிய நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

10ம் வசனத்தின் இரண்டாவது வாக்கியமான "தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாய்ச் சுரந்து வரும்" என்பது, செல்வச் செழிப்பைக் குறிப்பிடும் விவரணமாகும். துன்மார்க்கருடைய செல்வத்தைக் கண்டு, அவற்றின் பக்கமாக ஈர்க்கப்படுகின்ற மக்கள் தேவனை விட்டுவிலகி துன்மார்க்கரின் வழிகளில் சென் றாலும், அவர்களுக்கும் செல்வம் பரிபூரணமாகச் சுரந்து வரும் என்பதை இவ்விவரணம் சுட்டிக்காட்டுகிறது.[22] இதனால், அவர் களும் செல்வச் செழிப்பில் வாழ்ந்து வந்தனர். அதுமட்டுமல்ல,

---

[21] M.E.Tate, *Psalms 51-100: Word Biblical Commentary Vol. 20*, p. 229.
[22] J.C.McCann, *Psalm 73: An Interpretation Emphasising Rhetorical and Canonical Criticism*, p. 35. சில வேதஆராய்ச்சியாளர்கள் "தண்ணீர் கள் அவர்களுக்குப் பரிபூரணமாய்ச் சுரந்து வரும்" என்னும் வாக்கி யத்தை, "துன்மார்க்கருடைய வார்த்தைகளை மக்கள் தண்ணீரைப்போல குடிக்கிறார்கள்" என்னும் அர்த்தத்தில் வியாக்கியானம் செய்துள்ளனர்

தேவனை விட்டு வழிவிலகிச் சென்ற மக்கள் தாங்கள் செய்யும் காரியங்கள் தேவனுக்குத் தெரியாது என்னும் எண்ணத்தில் வாழ்ந்துவந்தனர். சங்கீதக்காரன் 11ம் வசனத்தில் இதைச் சுட்டிக்காட்டியுள்ளான்:

தேவனுக்கு அது எப்படித் தெரியும்?
உன்னதமானவருக்கு அதைப் பற்றி
அறிவு உண்டோ? என்று சொல்லுகிறார்கள்
(சங்கீதம் 73:11).

துன்மார்க்கர் தங்களுடைய மனதைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்காகச் சொல்லிக்கொள்ளும் வார்த்தையாகவே இவ்வசனம் உள்ளது. பிழையான வழிகளில் செல்கிறவர்கள், தங்கள் தவறுகளைத் தேவன் பாராதவர்போல இருந்துவிடுவார் என்னும் எண்ணத்தில் துணிகரமாகப் பாவம் செய்கின்றனர். ஆனால், சங்கீதக்காரன் இவர்களைத் துன்மார்க்கர் என்றே 12ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

இதோ இவர்கள் துன்மார்க்கர்.
இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து
ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்
(சங்கீதம் 73:12).

சுகஜீவிகளாக வாழ்ந்து, தங்களுடைய செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளும் துன்மார்க்கரின் வாழ்வே ஆசீர்வாதமானது என்று சங்கீதக்காரன் எண்ணினான். தற்காலத்தில் கிறிஸ்தவர்களும் தங்களுடைய வாழ்வில் கஷ்டங்களும், துயரங்களும், வறுமையும், வியாதியும் வரும்போது, கிறிஸ்தவரல்லாதவர்களையும், தேவபக்தியற்றவர்களையும் பார்த்து, அவர்களுடைய வாழ்வே ஆசீர்வாதமாக இருக்கின்றது என்று புலம்புகிறார்கள். ஆனால், இது தேவனுடைய ஆசீர்வாதம் எத்தகையது என்பதை அறியாமல் இருப்பதன் விளைவாகவே உள்ளது.

---

(A.Cohen, *The Psalms: An Introduction and Commentary*, p. 232; H.J.Kraus, *Psalms: 60-150: A Commentary*, p. 664). ஆனால், துன்மார்க்கரைப் பின்பற்றுகிறவர்கள் தண்ணீரைப் போல செல்வத்தைக் குடிக்கிறார்கள் என்பதே இவ்வசனத்திற்குப் பொருத்தமான விளக்கமாக உள்ளது.

தேவனுடைய ஆசீர்வாதம் சரீரப்பிரகாரமானதாகவும், பொருளாதார ரீதியானதாகவும் மட்டும் இருப்பதில்லை. இது ஆவிக்குரிய அம்சத்தையும் உள்ளடக்கியுள்ளது. தேவன் "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கின்றார்" (எபே.1:3). ஆவிக்குரிய ஆசீர்வாதம், பாவமன்னிப்பு, தேவனுடைய பிள்ளையாக மாறுதல், பரிசுத்த ஆவியானவரைப் பெறுதல், ஆவிக்குரிய போராட்டங்களில் ஜெயம்பெறுதல், பரலோக வாழ்வுக்குப் பங்குள்ளவர்களாகுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இத்தகைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் தந்துள்ள தேவன், சில நேரங்களில் நம்மைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவும் (1பேது.1:7), ஆவிக்குரிய பிரகாரம் நாம் வளர்ச்சியடைவதற்காகவும் (யாக்.1:2-4), நமது விசுவாசத்தைப் பெலப்படுத்துவதற்காகவும் பாடுகள் நம்வாழ்வில் வருவதற்கு அனுமதிக்கின்றார். மேலும், துயரங்கள் கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாகவே உள்ளன (பிலி.1:29, 1பேது.1:6, 2தீமோ.3:12). எனவே, வாழ்க்கையில் துயரங்கள் வரும்போது, தேவனை அறியாத மக்கள் செல்வச் செழிப்பில் வாழ்வதைப் பார்த்து பொறாமைப் படுவதும், நம்முடைய துயர நிலைமைக்காகப் புலம்புவதும் அர்த்தமற்றது.



## (3). நீதிமானாக வாழ்வதில் ஏதாவது நன்மை உள்ளதா? (சங்கீதம் 73:13-15)

துன்மார்க்கர் தீமையான வழிகளில் செல்வத்தைச் சேர்த்து, சுகபோகமாக வாழ்வதைக் கவனித்துப் பார்த்த சங்கீதக்காரன், தான் மட்டும் தேவனுக்குப் பயந்து பரிசுத்தமாக வாழ்வதில்

ஏதாவது நன்மை இருக்கின்றதா? என்று சிந்திக்கத் தொடங்கினான். தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளின்படி வாழும்போது தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதே அவனுடைய நம்பிக்கையாக இருந்தது. ஆனால், இந்த நம்பிக்கையை முரண்படுத்தும்விதத்தில், தேவபக்தியற்ற மனிதர்களின் வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்கும்போது, சங்கீதக்காரனுடைய வாழ்க்கை துயரத்தினால் நிரம்பியிருந்தது. இதனால், தான் இவ்வளவு காலமும் தேவனுக்குப் பயந்து நீதிமானாக வாழ்ந்து வந்ததில் எவ்வித பயனும் இல்லை என்னும் எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது.

சங்கீதக்காரன் தன்னுடைய மனக்குழப்பத்தை 13ம் வசனத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

நான் விருதாவாகவே
என் இருதயத்தைச் சுத்தம் பண்ணி,
குற்றமில்லாமையிலே
என் கைகளைக் கழுவினேன் (சங்கீதம் 73:13).

“இருதயத்தைச் சுத்தம் பண்ணுதல்” என்பது, நீதியும் நேர்மையுமான முறையில் வாழ்வதைப் பற்றிய விவரணமாகும்.[23] “குற்றமில்லாமையிலே கைகளைக் கழுவுதல்” என்னும் சொற்பிரயோகம், மற்றவரை ஒடுக்குதல், கொலைசெய்தல் என்னும் குற்றங்களைச் செய்யாமல் இருப்பதைப்பற்றிய குறிப்பாகும்.[24] இது பரிசுத்தமாக வாழ்வதைக் குறிப்பிடும் விவரணமாகவும் உள்ளது.[25] எனவே, சங்கீதக்காரன் எவ்வித பிழையும் செய்யாமல் பரிசுத்தமாகவே வாழ்ந்துள்ளான். ஆனால், துன்மார்க்கருடைய வாழ்வு செல்வச் செழிப்பில் ஆசீர்வாதமாகவும், ஆனந்தமாகவும் இருப்பதை அவன் கண்டபோது, தான் தேவனுக்குப் பயந்து பரிசுத்தமாக வாழ்ந்ததில் எவ்வித பயனும் இல்லை என்று எண்ணத் தொடங்கினான். நீதிமானாக இருப்பதற்குத் தனக்கு தண்டனையே

[26] W.A.VanGemeren, *Psalms: Expositor's Bible Commentary Vol.5*,p. 479
[26] Ibid. p. 479.
[28] M.Tate, *Psalms 51-100: Word Biblical Commentary Vol. 20*, p. 235.

கிடைத்துள்ளது என்றே அவன் எண்ணினான். 14ம் வசனத்தில் அவன் தன்னுடைய துயரத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளான்:

நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும்,
காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்
(சங்கீதம் 73:14).

இவ்வசனத்தில் "வாதிக்கப்படுதல்" "தண்டிக்கப்படுதல்" என்னும் பதங்கள், சங்கீதக்காரனுடைய துயர நிலையை வர்ணிக்கின்றன. தனக்கு எத்தகைய துயரம் ஏற்பட்டது என்பதைப்பற்றி அவன் இவ்வசனத்தில் குறிப்பிடவில்லை. துன்மார்க்கர் ஆரோக்கியமானவர்களாக இருப்பதாக சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளமையால் (சங்.73:4-5), அவன் வியாதிப்பட்டவனாக இருந்திருக்கலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால், துன்மார்க்கரின் செல்வச் செழிப்பான நிலையைப்பற்றியே சங்கீதக்காரன் இச்சங்கீதத்தில் அதிகமாக எழுதியுள்ளமையால், அவன் ஏழையாக, தனது அன்றாட வாழ்க்கைச் செலவுகளுக்கே கஷ்டப்படுகிறவனாக இருந்திருக்க வேண்டும். இவ்வசனத்தில் "நாள்தோறும்" "காலை தோறும்" என்னும் சொற்பிரயோகங்கள், சங்கீதக்காரனுடைய துயரம் ஒருநாள் கவலையாக இராமல், அன்றாடம் அவன் கஷ்டப்படுகிறவனாக இருந்துள்ளதையே சுட்டிக்காட்டுகின்றன. துயரத்துடனிருந்த சங்கீதக்காரன் தனது பிரச்சினையை மற்றவர்களிடம் சொல்லமுடியாத நிலையில் இருந்தான். அவன் பாடல்களைப்பாடி மக்களைத் தேவஆராதனையில் வழிநடத்துகிறவனாக இருந்ததே இதற்கான காரணமாகும். அவன் தன்னுடைய மனக்குமுறலை, அதாவது, தான் நீதிமானாக வாழ்வதில் எவ்வித பயனும் இல்லை என்னும் எண்ணத்தை மக்களிடம் சொன்னால் அவர்கள் தன்னைப் பகைஞனாகக் கருதலாம் என்று நினைத்தான். இது ஆலயத்தில் பணிபுரியமுடியாத நிலையை ஏற்படுத்திவிடலாம் என்றும், அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் பிற்கால சந்ததியினரும் தன்னைத் துரோகியாகவே பார்ப்பார்கள் என்றும் அவன் எண்ணினான். சங்கீதக்காரன் தன்னுடைய இத்த


கைய இக்கட்டான நிலையைப் பற்றி 15ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

> இவ்விதமாய்ப் பேசுவேன் என்று
> நான் சொன்னேனானால்,
> இதோ உம்முடைய பிள்ளைகளின் சந்ததிக்குத்
> துரோகியாவேன் (சங்கீதம் 73:15)

துயரப்படுகிற நீதிமான்களின் நிலைமை இன்றும் இதேவிதமாகவே உள்ளது. விசுவாசியின் வாழ்வில் துயரமே வராது, அவன் எப்பொழுதும் செல்வச் செழிப்பில் சுகபோகமாகவே வாழ்வான் என்று பொதுவாக கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். எனவே, ஒருவனுடைய வாழ்க்கையில், வியாதி, துயரம், வறுமை, தோல்வி, இழப்பு போன்றவை ஏற்படும்போது, அவன் விசுவாசத்தில் பின்வாங்கிப்போய்விட்டான் அல்லது பாவத்தில் விழுந்துவிட்டான் என்னும் முடிவுக்கு வந்துவிடுகின்றனர். இதனால், அவர்கள் அவனை வித்தியாசமான முறையில் பார்ப்பதும், அவனைப்பற்றி அவதூறாய்ப் பேசுவதும் வழக்கம். எனவே, துயரத்துடன் இருக்கும் கிறிஸ்தவன், தன்னுடைய துயரத்தைத் தனக்குள்ளேயே மறைத்து வைத்துக் கொள்கின்றான். மேலும், கிறிஸ்தவனாக வாழ்வதிலும் எவ்வித பயனும் இல்லை என்றும் அவன் எண்ணுகின்றான். சில நேரங்களில் நமது நிலையும் இப்படித்தான் உள்ளது. நம்முடைய பிரச்சினையை மற்றவரிடம் சொல்லமுடியாத நிலையிலும், நம்மால் அவற்றுக்கான பதிலைக் காணமுடியாத நிலையிலும் நாம் இருக்கின்றோம். இத்தகைய நெருக்கடியான நிலையில் சங்கீதக்காரன் எவ்வாறு செயற்பட்டானோ, அவ்வாறே நாமும் செயற்பட வேண்டும்.

துன்மார்க்கரின் செல்வச் செழிப்பான வாழ்வைப் பார்த்து பொறாமைப்பட்ட சங்கீதக்காரனுடைய உள்ளத்தில் இருந்த மூன்று கேள்விகளுக்கும் அவனால் பதில் காணமுடியாமல் இருந்தது. இதை மற்றவர்களிடம் சொல்லமுடியாத நிலையிலும் அவன் இருந்தான். இதனால், அவன் தன்னுடைய கேள்விகளுடன்

ஆலயத்திற்குச் சென்று, அங்கு தேவனுடைய பிரசன்னத்தில் அவற்றுக்கான சரியான பதிலைக் கண்டுகொண்டான். தேவன் உண்மையிலேயே தன்னுடைய வாழ்வில் நல்லவராக இருக்கின்றாரா? துன்மார்க்கரின் வாழ்வில் ஆசீர்வாதத்தின் தன்மை உள்ளதா? நீதிமானாக வாழ்வதில் ஏதாவது நன்மை உள்ளதா? என்னும் சங்கீதக்காரனின் கேள்விகளுக்கு, அவன் தேவனுடைய பிரசன்னத்தில் அறிந்துகொண்ட பதில்கள் அடுத்த அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளன.



## இரண்டாம் அத்தியாயம்

# இறைவனின் பிரசன்னத்தில்



# அறிந்துகொண்ட உண்மைகள்

## சங்கீதம் 73:16-26

துன்மார்க்கர் செல்வச் செழிப்பில் சுகபோகமாக வாழ்வதைக் கண்டு, அவர்கள் மீது பொறாமை கொண்ட சங்கீதக்காரன் (சங்.73:3), தேவன் உண்மையிலேயே தன் வாழ்வில் நல்லவராய் இருக்கிறாரா? என்று சந்தேகப்பட்டான் (சங்.73:1-2). அவனைப் பொறுத்தவரை, துன்மார்க்கரே ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இவ்வுலகில் வாழ்ந்துவந்தனர் (சங்.73:4-12). இதனால்,

தான் நீதிமானாக வாழ்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்று அவன் எண்ணினான் (சங்.7:13-14). அவனால் தன்னுடைய உள்ளத்தில் இருந்த வேதனையை எவரிடமும் வெளிப்படுத்த முடியாமல் இருந்தது (சங்.73:15). இதனால், அவன் ஆலயத்திற்குச் சென்று, தேவனுடைய பிரசன்னத்தில் தன்னுடைய மனக் குழப்பத்திற்கான பதிலைக் கண்டுகொண்டான். 73ம் சங்கீதத்தில் 16ம் 17ம் வசனங்கள் இதைப்பற்றி அறியத்தருகின்றன:

இதை அறியும்படிக்கு யோசித்துப் பார்த்தேன்
நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள்
பிரவேசித்து (சங்கீதம் 73:16).

அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும்,
அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது
(சங்கீதம் 73:17).

"இதை அறியும்படி" என்று சங்கீதக்காரன் 16ம் வசனத்தில் குறிப்பிடுவது, அவனுடைய உள்ளத்தில் துன்மார்க்கருடைய செல்வச் செழிப்பையும் நீதிமானாகிய தன்னுடைய துயரத்தையும் பற்றி இருந்த குழப்பத்தையாகும். துன்மார்க்கர் சுகபோகமாக வாழும்போது, தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு பரிசுத்தமாக இருப்பவர்களின் வாழ்வில் துயரங்கள் ஏன் வருகின்றன? என்னும் கேள்வியை மற்றவர்களிடம் கேட்கமுடியாத நிலையில் சங்கீதக்காரன் இருந்தான். அவன் இதைப்பற்றி கடுமையாக யோசித்துப் பார்த்தான். ஆனால் அவனால், தன்னுடைய உள்ளத்திலிருந்த கேள்விகளுக்கான பதிலைக் கண்டுகொள்ள முடியவில்லை. இதனால் அவன் ஆலயத்திற்குச் சென்று தேவனுடைய பிரசன்னத்தில் தன்னுடைய உள்ளத்தில் இருந்த கேள்விகளுக்கான பதிலைக் கண்டு கொண்டான்.[1] 73ம் சங்கீதத்தில் 18 முதல் 26 வரையிலான

[1] ஆலயத்திற்குச் சென்ற சங்கீதக்காரன் எவ்வாறு தன்னுடைய உள்ளத்திலிருந்த கேள்விகளுக்கான பதிலைக் கண்டுகொண்டான் என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்துமுரண்பாடுகள் நிலவுகின்றன. ஆலயத்திற்குச் சென்ற சங்கீதக்காரன் அங்கு வைக்கப்பட்டிருந்த வேதாகமத்தை வாசித்ததன் மூலம் தன் கேள்விகளுக்கான பதிலைக் கண்டு

வசனங்களில் தேவனுடைய பிரசன்னத்தில் சங்கீதக்காரன் கண்டுகொண்ட மூன்று உண்மைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்கீதக்காரன் தேவனுடைய பிரசன்னத்தில் கண்டுகொண்ட மூன்று உண்மைகளும், துன்மார்க்கரின் செல்வச் செழிப்பான வாழ்வைப் பற்றி பொறாமையும், தன்னுடைய வறுமையான வாழ்வைப் பற்றி துயரமும் கொண்டிருந்த சங்கீதக்காரனுடைய உள்ளத்திற்கு ஆறுதலைக் கொடுத்தது. அத்தோடு, இவ்வுலக வாழ்வைப்பற்றி சரியான எண்ணமுடையவனாக இருப்பதற்கும் அவனுக்கு உதவியது. உண்மையில், மனிதர்களுடைய வாழ்வைப் பார்க்கும்போது, இவ்வுலக வாழ்வைப்பற்றி மனக்குழப்பமும், விரக்தியும், பொறாமையும், எரிச்சலும் ஏற்படுவது வழக்கம். இதனால் சங்கீதக்காரனைப்போல, நாமும் தேவனுடைய பிரசன்னத்தில், குறிப்பாக அவருடைய வார்த்தையின் மூலம் மானிட வாழ்வைப்பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களைப் பார்த்து பொறாமையும், எரிச்சலும், துயரமும் கொள்ளாமல், தேவன் நமக்கு கொடுத்துள்ள வாழ்வை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு திருப்தியுடன் வாழவேண்டும். இவ்வத்தி

---

கொண்டான் என்று சிலர் கருதுகின்றனர் (J.Calvin, Cited in J.M.Boice, *Psalms Volune 2: An Expositional Commentary*, p. 613). பாவங்களுக்காகச் செலுத்தப்பட்ட பலிமிருகங்களின் சரீரங்கள் தகனிக்கப்படும் பலிபீடத்தில் இருந்த அக்கினியின்மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றி சங்கீதக்காரன் அறிந்து கொண்டிருக்கலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். (Ibid., p. 613). ஆலயத்தில் தேவனை வழிபடும்போதே சங்கீதக்காரன் தனது உள்ளத்தின் கேள்விகளுக்கான பதிலைக் கண்டுகொண்டான் என்று சிலர் கூறுகின்றனர் (R.Clements, *Songs of Experience: Midnight and Dawn through the Eyes of the Psalmists*, pp. 80-81). ஆலய வழிபாட்டில், தேவன் மக்களுக்கு அருளும் இரட்சிப்பையும் நியாயத்தீர்ப்பையும்பற்றிய சங்கீதங்கள் பாடல்களாகப் பாடப்பட்டமையால், சங்கீதக்காரன் துன்மார்க்கருடைய இறுதிநிலையைப்பற்றி இப்பாடல்களின் மூலம் அறிந்துகொண்டிருக்கலாம் என்பது சிலரது தர்க்கமாக உள்ளது (L.C.Allen, *The Psalms: New International Bible Commentary*, p. 606). ஆசாப் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்தமையால் (1நாளா.25:1, 2நாளா.29:30, 35:15), தேவன் நேரடியாக அல்லது ஒரு தரிசனத்தின் மூலம் அவனோடு பேசியிருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர் (R.E.O.White, *A Christian Handbook to the Psalms*, 113).

யாயத்தில், தேவனுடைய பிரசன்னத்தில் சங்கீதக்காரன் அறிந்து கொண்ட மூன்று உண்மைகளும் விளக்கப்பட்டுள்ளன.



## (1). துன்மார்க்கரின் இறுதி நிலையை அறிந்துகொண்டான் (சங்கீதம் 73:18-20)

துன்மார்க்கர் இவ்வுலகில் செல்வச் செழிப்புடன் சுகபோகமாக வாழ்ந்தாலும், அவர்கள் தேவனை அறியாதவர்களாக இருப்பதனால், அவர்களுடைய முடிவு அழிவு என்பதை சங்கீதக்காரன் முதலில் அறிந்துகொண்டான். 18 முதல் 20 வரையிலான வசனங்களில் அவன் இதைப்பற்றி பின்வருமாறு எழுதியுள்ளான்:

நிச்சயமாகவே நீர் அவர்களைச்
சறுக்கலான இடங்களில் நிறுத்தி,
பாழான இடங்களில்
விழப்பண்ணுகிறீர் (சங்கீதம் 73:18).
அவர்கள் ஒரு நிமிஷத்தில்
எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள்!
பயங்கரங்களால்
அழிந்து நிர்மூலமாகிறார்கள் (சங்கீதம் 73:19).
நித்திரை தெளிந்தவுடனே
சொப்பனம் ஒழிவதுபோல்,
ஆண்டவரே நீர் விழிக்கும்போது
அவர்கள் வேஷத்தை இகழுவீர் (சங்கீதம் 73:20).

செல்வச் செழிப்பில் சுகபோகமாக வாழும் துன்மார்க்கர் இவ்வுலகத்தில் வசதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கின்றார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த சங்கீதக்காரன், அவர்கள் "சறுக்கலான இடங்களில்" இருக்கின்றனர் என்னும் உண்மையை அறிந்து கொண்டான். அவர்களுடைய அஸ்திபாரம் உறுதியானதாக இருக்கவில்லை. பாழான இடங்களில் விழுந்து போகக் கூடிய சறுக்கலான இடங்களில் அவர்கள் இருந்தனர். தேவன்

அவர்களை நியாயந்தீர்க்கும்போது, அவர்களுடைய செல்வம் அவர்களைக் காப்பாற்றாது. எனவே, மனிதர்கள் உலகச் செல் வங்களை அல்ல, தங்களை நித்திய அழிவிலிருந்து காப்பாற்றக் கூடிய இயேசுகிறிஸ்துவையே நம்பவேண்டும் (1தெச.1:10). நம் "இதயம் பணப்பையில் அல்ல இயேசுவிடம் இருக்கவேண்டும்."[2] இல்லையென்றால் அழிவு நிச்சயம்.

துன்மார்க்கர் சடுதியாய் அழிந்துபோவார்கள் என்பதையே 19ம் வசனத்தில் "அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள்" என்னும் வாக்கியம் அறியத்தருகின்றது. துன் மார்க்கருக்கு எப்பொழுது அழிவு வரும் என்று நமக்குத் தெரி யாது. சிலநேரங்களில் அவர்கள் பல தலைமுறைகளுக்குச் செல்வந்தர்களாகவே வாழலாம். ஆனால் அவர்களுக்கு அழிவு வரும்போது, அது சடுதியாக நடைபெறுகின்ற சம்பவமாகவே இருக்கும்.

20ம் வசனத்தில் துன்மார்க்கரின் நிலை ஒரு கனவுக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. நித்திரை கொள்ளும்போது கனவு நிஜமானதாக இருப்பதுபோலவே, துன்மார்க்கரும் தங்களுடைய வாழ்வு நிஜமா னது என்று நினைக்கின்றனர். ஆனால், நித்திரை தெளிந்தவுடன் கனவு நிஜமல்ல என்பதை நாம் கண்டுகொள்வதுபோலவே, தேவன் துன்மார்க்கரை நியாயந்தீர்க்கும்போது, அவர்களும், தாங்கள் இதுவரையில் வாழ்ந்த வாழ்க்கை நிஜமானது அல்ல என்பதைக் கண்டுகொள்வார்கள்.

"தேவன் விழிக்கும்போது" என்று சங்கீதக்காரன் கூறுவதனால், அவர் தற்பொழுது நித்திரையாக இருக்கின்றார் என்று நாம் கருதலாகாது (சங்.121:4). இது, தேவன் துன்மார்க்கரைத் தண் டிப்பதற்காக எழுவதைப்பற்றிய குறிப்பாக உள்ளது. தேவனு டைய நீடிய பொறுமையே இங்கு நித்திரைக்கு ஒப்பிடப்பட்டுள் ளது. மேலும் இவ்வசனத்தில் "வேஷத்தை இகழுவீர்" என்னும் சொற்பிரயோகம் துன்மார்க்கருடைய தற்கால நிலை நிஜமானது அல்ல, அது வெறும் வேஷம்தான் என்பதை அறியத்தருகின்றது.

---

[2] J.Phillips, *Exploring the Psalms Volume One*, p. 604.

அவர்கள் திரளான செல்வமுடையவர்களாக இருந்தமையால், சமுதாயத்தின் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் தாங்கள் தேவர்களைப்போல இருப்பதாக எண்ணினார்கள். ஆனால் தேவன் அவர்களைத் தண்டிக்கும்போது, அவர்களுடைய இத்தகைய வேஷத்தை அவர் இகழுவார்.[3] எனவே, துன்மார்க்கரின் செல்வச் செழிப்பான வாழ்க்கையைப் பார்த்து பொறாமைப்படுவதில் எவ்வித அர்த்தமுமில்லை. இதனால், 37ம் சங்கீதத்தில், "பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே. நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே. அவர்கள் புல்லைப் போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப்போல் வாடிப் போவார்கள்" (சங்.37:1-2) என்னும் அறிவுறுத்தல் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

துன்மார்க்கரின் இறுதி நிலை எத்தகையது என்பதை அறிந்து கொண்டபோது, "சங்கீதக்காரனுக்கு அவர்கள்மீது இருந்த பொறாமை நீங்கி, அவர்களுடைய முடிவைப் பற்றிய பயமே ஏற்பட்டது."[4] செல்வச் செழிப்பில் வாழும் துன்மார்க்கர்மீது பொறாமை கொள்ளாமல், அவர்களுடைய பரிதாபமான நிலையை அறிந்தவர்களாக, அவர்களையும் தேவனண்டை கொண்டு வரவேண்டியது கிறிஸ்தவர்களாகிய நமது கடமையாகும்.[5]

---

[3] W.A.VanGemeren, *Psalms: Expositor's Bible Commentary Vol.5*,p. 481.
[4] C.H.Spurgeon, *The Treasury of David*, p. 634.
[5] "தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்" என்று லூக்கா 4:18ல் இயேசுகிறிஸ்து தெரிவித்ததை ஆதாரமாகக் கொண்டு, சுவிசேஷம் வறியவர்களுக்கு மட்டுமானது என்றும், செல்வந்தர்கள் தேவனுடைய ராட்சியத்திற்குள் பிரவேசிப்பதில்லை என்றும் சில கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். ஆனால் இவ்வசனத்தில் "தரித்திரர்" என்னும் பதம் பொருளாதாரரீதியாக வறியவர்களாக இருப்பவர்களைக் குறிப்பிடும் விதத்தில் உபயோகிக்கப்படவில்லை. இது ஆவிக்குரிய வறுமையையே குறிக்கின்றது. செல்வந்தர்கள் பொருளாதார ரீதியாக உயர்வான நிலையில் இருந்தாலும், ஆவிக்குரியபிரகாரம் தரித்திரர்களாகவே உள்ளனர். எனவே, சுவிசேஷம் இத்தகைய தரித்திரர்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டியது அவசியம். மேலும், "ஐசுவரியவான்



## (2). துயரத்துடனிருந்த தன் நிலையை அறிந்துகொண்டான் (சங்கீதம் 73:21-22)

துன்மார்க்கரின் வாழ்வைப் பார்த்து குழப்பமடைந்திருந்த சங்கீதக் காரன், தேவனுடைய பிரசன்னத்தில் தனது துயரகரமான நிலை யையும் அறிந்துகொண்டான். நீதிமானையும் துன்மார்க்கரையும் தேவன் எவ்வாறு நடத்துகிறார் என்பதை அறியாத நிலையில், தேவன் துன்மார்க்கரை ஆசீர்வதிப்பது தவறு என்று தேவன்மீது குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்த சங்கீதக்காரன், தான் தேவனுடைய செயல்களை அறியாதவனாக இருந்துள்ளதைக் கண்டுகொண் டான். 73ம் சங்கீதத்தில் 21ம் 22ம் வசனங்களில் அவன் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளான்:

> இப்படியாக என் மனம் கசந்தது.
> என் உள்ளிந்திரியங்களிலே குத்துண்டேன்
> (சங்கீதம் 73:21).
> நான் காரியம் அறியாத மூடனானேன்.
> உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன்
> (சங்கீதம் 73:22).

“மனக்கசப்பு” “உள்ளிந்திரியங்களில் குத்தப்படுதல்” என்பன துன்மார்க்கருடைய செல்வச் செழிப்பான வாழ்க்கையைப் பார்த்து பொறாமை கொண்ட சங்கீதக்காரனுக்கு ஏற்பட்ட உணர் வுகளாகும். “உள்ளிந்திரியங்கள்” என்பதற்கு மூலமொழியில் “கல்லீரல்”(kidneys) என்னும் அர்த்தமுடைய பதமே உபயோகிக்

---

தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது” (மாற்.10:24-25) என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்று, செல்வந்தர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள் என்னும் அர்த்தமு டையது அல்ல. ஐசுவரியவான்கள் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்ப தில் இருக்கும் கஷ்டங்களைப்பற்றியே மாற்கு 10:25-27ல் இயேசு சுட் டிக்காட்டியுள்ளார். மனிதரால் செய்ய முடியாத இக்காரியத்தைத் தேவ னால் செய்யமுடியும் என்றும் அவர் அறியத்தந்துள்ளார் (மாற்.10:27).

கப்பட்டுள்ளது. லேவியராகமப் புத்தகத்தில் இப்பதம், 14 தடவைகள் சொல்லர்த்தமாக கல்லீரலைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால், சங்கீதங்களிலும், தீர்க்கதரிசனப் புத்தகங்களிலும், மனிதனுடைய உள்ளான, ஆவிக்குரிய பகுதியைக் குறிப்பிடும் விவரணமாக இப்பதம் உள்ளது. இதனால், தமிழில் இதை “உள்ளிந்திரியங்கள்” என்று மொழிபெயர்த்துள்ளனர். உள்ளிந்திரியங்களில் குத்தப்படுவதாகக் கூறுவது, ஆழமான உட்புற வேதனையைக் குறிக்கின்றது. துயரத்தினால் மனக்கசப்படைந்த சங்கீதக்காரன், சரீரப்பிரகாரமாக மட்டுமல்ல உள்ளான மனிதனிலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தான்.

தேவனை அறியாததும் அவருக்கு எதிரானதுமான துன்மார்க்கரைத் தேவன் ஆசீர்வதிக்கின்றார். ஆனால், அவரை நம்பிவாழும் தன்னை அவர் தண்டிக்கிறார் என்று எண்ணிய சங்கீதக்காரன், தேவனுடைய செயற்பாடுகளை அறியாத ஒரு மூடனைப்போலதான் இருந்துள்ளதை அறிந்துகொண்டான். இதையே “மிருகம் போலிருந்தேன்” என்று 22ம் வசனத்தில் அவன் குறிப்பிட்டுள்ளான். மனிதர்கள் அறிவற்ற நிலையில் மூடத்தனமாகச் செயற்படுவதைக் குறிப்பிட, அவர்களை மிருகங்களாக வர்ணிப்பது அக்காலத்தின் வழக்கமாக இருந்தது (சங்.32:9, 49:12,20, ஏசா.1:2-3). இதனால் சங்கீதக்காரனும் தன்னை ஒரு மிருகமாக உவமித்துள்ளான். அவன் நித்தியத்தைவிட இவ்வுலக வாழ்வைப்பற்றிய சிந்தனையுடன் இருந்தமையால், அதாவது, தேவனைவிட உலக செல்வத்தைப் பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டிருந்தமையால், அவன் அறிவற்ற மூடனாகவே இருந்துள்ளான்.

இவ்வுலகம் தேவனுடைய ஆளுகையின் கீழேயே இருக்கின்றது. தேவன் தம்முடைய சித்தத்தின்படி பூமியின் குடிகளை நடத்திவருகின்றார்(தானி.4:35). துன்மார்க்கர் செல்வச் செழிப்பிலும், நீதிமான்கள் துயரத்திலும் வாழ்வதை அனுமதிப்பதற்கு அவர் தகுந்த காரணங்களை வைத்திருக்கின்றார். கிறிஸ்தவ வாழ்வில் துயரங்களும் பாடுகளும் குறிப்பிட்ட சில காரணங்களுக்காகவே அனுமதிக்கப்படுகின்றன என்பதை அறியாத நிலையில் தேவனு

டைய ஆளுகையை விமர்சிப்பவர்கள் அறிவற்ற மிருகங்களைப் போலவே செயற்படுகின்றார்கள். எனினும், துன்மார்க்கருடைய சுகபோகமான வாழ்வு அழிவிலேயே முடிவடையும். ஆனால், நீதிமான்களின் துயரமான வாழ்வு சமாதானத்தில் முடிவடையும். அதாவது, தேவனை அறியாத துன்மார்க்கர் நரகத்திற்குச் செல்கையில், நீதிமான்கள் என்றென்றும் தேவனோடு வாழ்வார்கள். இதுவே வேதாகமம் அறியத்தரும் சத்தியமாகும்.



## (3). துணையாக எப்பொழுதும் இருப்பவரை அறிந்துகொண்டான் (சங்கீதம் 73:23-26)

தேவனுடைய பிரசன்னத்தில் சங்கீதக்காரன் அறிந்துகொண்ட மூன்றாவது காரியம், தேவன் எப்பொழுதும் தனக்குத் துணையாகத் தன்னோடு இருக்கின்றார் என்னும் சத்தியமாகும். சங்கீதக்காரன் துயரத்துடன் இருந்த காலத்தில் அவனோடு இருந்த தேவன் கடைசிவரைக்கும் அவனோடு இருப்பார். துன்மார்க்கரிடம் திரளான சொத்துக்கள் இருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கையில் தேவன் இருக்கவில்லை. இதனால் அவர்கள் ஒருநாள் அழிந்து போவார்கள். ஆனால், தான் தேவனுடன் என்றென்றும் பரலோகத்தில் வாழக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்றுள்ளேன் என்னும் உண்மையை சங்கீதக்காரன் அறிந்துகொண்டான். 23ம், 24ம், வசனங்களில் அவன் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளான்:

> ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்.
> என் வலது கையைப் பிடித்துத் தாங்குகிறீர்.
> உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி,
> முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்
> (சங்கீதம் 73:23-24).

தேவன் தன் வாழ்வில் எப்படிப்பட்டவராக இருக்கின்றார் என்பதைச் சங்கீதக்காரன் இவ்வசனங்களில் குறிப்பிட்டுள்ளான்.

தேவன் எப்பொழுதும் தன்னோடு இருக்கின்றார் என்பதை அறிந்து கொண்ட சங்கீதக்காரன் துயரத்திலிருந்து விடுபட்டு, சந்தோஷம் அடைந்தான். உலகச் செல்வங்களும் இன்பங்களும் அல்ல, தேவனே மிகப்பெரிய செல்வமாக இருக்கின்றார் என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருபோதும் மறக்கலாகாது. உண் மையில், "தேவன் இல்லாத நிலையில் பரலோகம்கூட நரகமா கவே இருக்கும். ஆனால் தேவன் இருக்கும்போது பூமியும் பர லோகமாகவே இருக்கும்."[6]

தேவன் எப்பொழுதும் தன்னோடு இருப்பதனால் தான் பாதுகாப் பாக இருப்பதாகச் சங்கீதக்காரன் 23ம் வசனத்தில் குறிப் பிட்டுள்ளான். "என் வலது கையைப் பிடித்துத் தாங்குகிறீர்" என்னும் வாக்கியம் சங்கீதக்காரனின் இத்தகைய உணர்வையே சுட்டிக்காட்டுகிறது. வாழ்க்கையில் எத்தகைய நெருக்கடிகளும் பிரச்சினைகளும் வந்தாலும் தேவன் நமது வலதுகரத்தைப் பிடித்து நம்மைத் தாங்குகிறவராக இருக்கின்றார் (சங்.63:8, ஏசா.41:10, 41:13).

தனக்குப் பாதுகாப்பளிக்கும் தேவன், தம்முடைய ஆலோசனை யின்படி தன்னை வழிநடத்துவதாகவும் 24ம் வசனத்தில் சங்கீதக் காரன் குறிப்பிட்டுள்ளான். அவர் மகிமையில் தன்னை ஏற்றுக் கொள்ளும்வரை, அதாவது பரலோகத்திற்குள் தன்னை எடுத்துக் கொள்ளும்வரை[7] தான் இவ்வுலகத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்பதைத் தனக்குக் காண்பிப்பவராகத் தேவன் இருப்பதாகச் சங்கீதக்காரன் கூறுகின்றான்.[8] நாம் எவ்வாறு இவ்வுலகத்தில்

---

[6] E.C.Beisner, *Psalms of Promise: Celebrating the Majesty and Faithfulness of God*, p. 164.

[7] 24ம் வசனத்தில் "ஏற்றுக்கொள்ளுதல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதமே ஏனோக்கு தேவனால் எடுத்துக்கொள்ளப் பட்டதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

[8] 24ம் வசனத்தை எவ்வாறு வியாக்கியானம் செய்வது என்பதுபற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பலவிதமான கருத்துமுரண்பாடுகள் உள்ளன. முதலாவதாக, "முடிவில்" என்னும் பதத்தை இவ்வுலக வாழ்வுக் காலத்தைப்பற்றிய குறிப்பாகவா அல்லது மரணத்தின் பின்பான

வாழவேண்டும் என்பதைத் தேவன் தம்முடைய வார்த்தையான வேதாகமத்தில் நமக்குக் காண்பிக்கின்றார். எனவே, நாம் ஒவ் வொரு நாளும் தேவனுடைய வார்த்தையை வாசித்து தியா னித்து, ஜெபிப்பதன் மூலம் நமது வாழ்வுக்கான தேவவழிநடத்து தலைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

துன்மார்க்கரின் செல்வச் செழிப்பையும் தன்னுடைய துயர நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்து கவலைப்பட்டுக்கொண்டிருந்த சங்கீதக்காரன் தேவன் எப்பொழுதும் தன்னோடு இருந்து தன்னை வழிநடத்துகிறார் என்பதை மட்டுமல்ல, அவர் எல்லாவற்றிற்கும் போதுமானவராக இருக்கின்றார் என்பதையும் அறிந்து கொண் டான். "துன்மார்க்கருக்கு இவ்வுலகில் தேவனைத்தவிர மற்ற அனைத்தும் இருக்கின்றபோதிலும், நீதிமானுக்குத் தேவனே

---

வாழ்வைப் பற்றிய குறிப்பாகவா வியாக்கியானம் செய்வது என்னும் சர்ச்சை உள்ளது. அதாவது, சங்கீதக்காரனுடைய வாழ்வில் இருந்த பிரச்சினைகள், அவன் இவ்வுலகத்தில் வாழும்போதே தீர்ந்து விடுமா? அல்லது பரலோகத்தில்தான் அவனுடைய பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்குமா? என்பதுபற்றிய சர்ச்சை இதுவாகும் (A.A.Anderson, *Psalms: The New Century Bible Commentary Volume* 2, p. 535). இரண்டா வதாக, "மகிமை" என்னும் பதம் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் பரலோகத் தைக் குறித்தாலும், பழைய ஏற்பாட்டிலும் இதே அர்த்தத்துடனேயே இப்பதம் சங்கீதக்காரனால் உபயோகிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் வேதஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்துமுரண்பாடுகள் உள்ளன. சிலர் இப்பதத்தை இவ்வுலக வாழ்வுக்கு மட்டுப்படுத்துகின்றனர். (A.P. Ross, *Psalms: The Bible Knowledge Commentary Old Testament*, p. 848). ஆனால், சிலர் மறுவாழ்வுக்கும் இதை உபயோகித்துள்ளனர்.(C. A.Briggs & E.G.Briggs, *Psalms: International Critical Commentary Volume* 2, p. 147). இதேபோல, "ஏற்றுக்கொள்வீர்" என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ள பதம் "ஏற்றுக்கொள்ளுதல்" "வழிநடத்துதல்" (M.Dahood, *Psalms: Anchor Bible Commentary Vol. 2*, p. 195) "எடுத்துக்கொள்ளுதல்" (C.A.Briggs & E.G.Briggs, *Psalms: International Critical Commentary Volume* 2, p142; A.Weiser, *Psalms: The Old Testament Library*, p. 195) என்று மூன்றுவித அர்த்தங்களுடன் வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது. துன்மார்க்கரின் இறுதிநிலையைப் பற்றியே 18 முதல் 20 வரையிலான வசனங்களில் சங்கீதக்காரன் விளக்கியுள்ளமையினாலும், 25ம் வசனத் தில் பரலோகத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளமையினாலும், தேவன் தன் னைப் பரலோகத்திற்குள் எடுத்துக்கொள்வதைப்பற்றியே சங்கீதக்காரன் இவ்வசனத்தில் எழுதியுள்ளான் என்பது தெளிவாகின்றது.

எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருக்கின்றார்."[9] இதனால், இவ்வுலகத்திலும், இனி வரவிருக்கும் உலகத்திலும் தேவனைத்தவிர தனக்கு வேறு யாரும் இல்லை என்று 25ம் வசனத்தில் சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளான்:

> பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு?
> பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு
> வேறே விருப்பமில்லை (சங்கீதம் 73:25).

தேவன் எல்லாவற்றிற்கும் போதுமானவராக இருப்பதனால், நாம் எதற்கும் கவலைப்படவேண்டியதில்லை. இவ்வுலக வாழ்வில் பாடுகளும் கஷ்டங்களும் இருக்கின்றபோதிலும் (பிலி.1:29, 1பேது.1:6, 2தீமோ.3:12), தேவன் நம்மைப் பெலப்படுத்தி, நமது தேவைகளைச் சந்தித்து நம்மை வழிநடத்தி வருகின்றார். சங்கீதக்காரன் இவ்வுண்மையை 26ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்:

> என் மாம்சமும் என் இருதயமும்
> மாண்டு போகிறது
> தேவன் என்றென்றைக்கும்
> என் இருதயத்தின் கன்மலையும்
> என் பங்குமாயிருக்கிறார் (சங்கீதம் 73:26).

சங்கீதக்காரன் சரீரத்திலும், இதயத்திலும் பலவீனமாக இருந்துள்ளதை இவ்வசனத்தின் முதல் வாக்கியம் அறியத்தருகின்றது. இவ்வசனத்தில், "மாண்டுபோகிறது" என்பதை ஆங்கிலம்-தமிழ் இணைவேதாகமம் "தளர்ந்தாலும்" என்றும், புதிய தமிழ் வேதாகமம் "சோர்ந்து போகலாம்" என்றும் குறிப்பிட்டுள்ளன. தான் சரீரப்பிரகாரமாகப் பலவீனமாகவும், உள்ளத்தில் தளர்ச்சியடைந்தவனாகவும் இருந்தாலும், தேவன் தன்னை போஷித்து பெலப்படுத்துவார் என்று நம்பிக்கையோடு இரண்டாவது வரியை எழுதியுள்ளான்.

தேவன் தன்னை பெலப்படுத்துகிறவர் என்பதைச் சுட்டிக்காட்ட, அவர் தன் "இருதயத்தின் கன்மலையாக" இருப்பதாகச் சங்கீதக்

[9] W.W.Wiersbe, *Be Worshipful: Psalms 1-89*, p.240.


காரன் குறிப்பிட்டுள்ளான். அவனுடைய காலத்தில் "கன்மலைகள்" கோட்டைகளின் அஸ்திபாரங்களாக இருந்தன. கன்மலையுடன் தொடர்புபடுத்தப்படும் விதத்திலேயே கோட்டைச் சுவர்கள் கட்டப்பட்டமையால், அவை உறுதியானவைகளாக இருந்தன. எனவே, தேவன் தன்னுடைய கன்மலை என்று சங்கீதக்காரன் கூறும்போது, அவர் தன்னுடைய வாழ்வின் உறுதியான ஆதாரமாக இருக்கின்றார் என்பதையே அவன் அறியத்தருகின்றான்.

"தேவன் தன் கன்மலையாக இருப்பதனால் தான் அசைக்கப்படுவதில்லை" என்பது 62ம் சங்கீதத்தை எழுதியவனின் நம்பிக்கையாக இருந்தது (சங்.62:2). உண்மையில், இவ்வுலக வாழ்வின் இடர்பாடுகளினால் நம் இதயம் தளர்ச்சியடைந்து சோர்ந்து போகையில், தேவன் நம் இதயத்தின் உறுதியான ஆதாரமாக இருந்து நம்மை பலப்படுத்துகிறவராக இருக்கின்றார். இத்தகைய பலப்படுத்துதலை அனுபவரீதியாகக் கண்டுகொண்ட அப்போஸ்தலனாகிய பவுல், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி.4:13) என்று கூறக்கூடியவராக இருந்தார்.

தேவன் தன்னுடைய இருதயத்தின் கன்மலையாக மட்டுமல்ல, தன் "பங்காக" இருப்பதாகவும் சங்கீதக்காரன் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். தேவன் தன்னுடைய தேவைகளைச் சந்திக்க வல்லவராக இருக்கின்றார் என்பதை அவன் இதன்மூலம் அறியத்தருகின்றான். ஏனெனில், "பங்கு" என்பதற்குச் சங்கீதக்காரன் மூலமொழியில் உபயோகித்துள்ள பதம் சிறப்பான அர்த்தமுடையது. இஸ்ரவேல் மக்களுக்கு வாக்குத்தத்த பூமியில் நிலம் பங்கிட்டுக்கொடுக்கப்பட்டபோது, லேவி கோத்திரத்தாருக்கு நிலம் கொடுக்கப்படவில்லை. தேவனே அவர்களுடைய பங்காக இருந்தார் (எண்.18:20-21, உபா.10:9). நிலமற்ற நிலையில் அவர்கள் விவசாயம் செய்து தங்களுடைய உணவைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. இதனால், ஏனைய கோத்திரத்தினர் தங்களுடைய வருமானத்தில் தேவனுக்குக் கொடுக்கும் பங்கு லேவி கோத்திரத்தாருக்கு உரியதாக இருந்தது. லேவி கோத்

திரத்தார் இவ்விதமாக "தேவனுடைய பங்கினால்" போஷிக்கப் பட்டார்கள் (எண்.18-1-32). இதனால், தேவன் அவர்களுடைய பங்காக இருந்தார். இத்தகைய அர்த்தத்திலேயே சங்கீதக்காரனும் தேவன் தன்னுடைய பங்காக இருக்கின்றார் என்று கூறுகிறான். உண்மையில், தேவன் தன்னைப் போஷிக்கிறவராக இருப்பதை அவன் அறிந்து கொண்டான்.

தேவன் தம்முடைய மக்களைப் போஷிக்கிறவராக இருக்கின்றார் என்பது வேதாகமம் அறியத்தரும் சத்தியமாகும். வானத்துப் பறவைகளைப் போஷித்து, காட்டுப் பூக்களை உடுத்துவிக்கும் தேவன், அதைவிட அதிக சிறப்பானவர்களான நம்மை நிச்சயம் போஷிப்பார் என்றும், தேவனுக்கு வாழ்வில் முதலிடம் கொடுக்கும்போது, அவர் நமது வாழ்வின் தேவைகளைச் சந்திப்பார் என்றும் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார் (மத்.6:25-34). இதனால்தான், "உன் மனதைப் பாவிகள் மேல் பொறாமை கொள்ள விடாதே. நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு" (நீதி.23:17) என்று வேதாகமம் அறிவுறுத்துகிறது. துன்மார்க்கரின் வாழ்வைப் பார்த்து பொறாமைப்படாமல், தேவனை நம்பி வாழும் போது, தேவன் நம் தேவைகளைச் சந்தித்து, நம்மை வழிநடத்தி வருவார்.



முடிவுரை

# ஆண்டவருக்கு அருகில் வாழும்



# நீதிமான்களின் நிம்மதியான வாழ்வு

## சங்கீதம் 73:27-28

துன்மார்க்கர் செல்வச் செழிப்பில் சுகபோகமாக வாழ்வதைக் கண்டு குழப்பமடைந்திருந்த சங்கீதக்காரன், தேவனுடைய பிரசன்னத்தில், துன்மார்க்கரின் இறுதிநிலையையும், தன்னுடைய நிலையையும் மட்டுமல்ல, தேவன் தன்னுடைய வாழ்வில் எப்படிப்பட்டவராக இருக்கின்றார் என்பதையும் அறிந்துகொண்டான். தேவன் எப்பொழுதும் தன்னோடிருந்து, தன் வாழ்வில் எல்லாவற்றுக்கும்

போதுமானவராகவும், தன்னைப் பெலப்படுத்தி போஷிப்பவரா கவும் இருக்கின்றார் என்னும் உண்மையை அறிந்துகொண்ட அவன், தேவனுக்கு அருகில் இருப்பதே நல்லது என்னும் முடிவுக்கு வந்துள்ளான். துன்மார்க்கர் செல்வந்தர்களாக இருந்தா லும், அவர்கள் தேவனைவிட்டுத் தூரமாகச் செல்கிறவர்களாக இருந்தனர். இதனால், அவர்கள் அழிவை நோக்கிப் போகின்றனர் என்பதை அறிந்துகொண்ட சங்கீதக்காரன், தேவன்மீது நம்பிக் கையுடையவனாக அவரை அண்டிக்கொண்டிருப்பதே நலம் என்னும் எண்ணத்துடன் இச்சங்கீதத்தை நிறைவு செய்துள்ளான்:

இதோ, உம்மைவிட்டுத்
தூரமாய்ப் போகிறவர்கள் நாசமடைவார்கள்
உம்மைவிட்டு சோரம்போகிற அனைவரையும்
சங்கரிப்பீர் (சங்கீதம் 73:27).
எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்.
நான் உமது கிரியையெல்லாம் சொல்லிவரும்படி
கர்த்தராகிய ஆண்டவர்மேல்
என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்
(சங்கீதம் 73:28).

தேவனைவிட்டுத் தூரமாகச் செல்கிறவர்களின் முடிவு அழிவா கவே உள்ளது. தேவனே அவர்களை அழிப்பவராக இருக்கின் றார். இதனால், சங்கீதக்காரன் தேவனை அண்டிக்கொண்டிருப் பதே நலம் என்பதை அறிந்துகொண்டான். சங்கீதக்காரன் ஆரம் பத்தில் துன்மார்க்கரின் வாழ்வைப் பார்த்து, தேவன் தன்னுடைய வாழ்வில் நல்லவராக இருக்கின்றாரா? என்று சந்தேகப்பட்டான். ஆனால் இப்பொழுது தேவனுடைய பிரசன்னத்தில் தன்னுடைய சந்தேகம் நீங்கியவனாக, அவர் எப்பொழுதும் தனக்கு நல்லவரா கவே இருக்கின்றார் என்பதை அறிந்துகொண்டான். இதனால், தான் தேவனையே நம்பியிருப்பதாக அவன் தெரிவித்துள்ளான். தேவன் நல்லவர் என்பதற்கான ஆதாரம் அவர் அருளும் பொருளாதார ஆசீர்வாதங்களில் அல்ல, அவர் நம்மோடு இருப் பதிலேயே தங்கியுள்ளது. “தேவனிடமிருந்து பொருட்களைப்

[1] J.L.Crenshaw, *The Psalms: An Introduction*, p. 114.

பெறுவது அல்ல, அவர் அருகில் இருப்பதே மேலான ஆசீர்வாதம்."[1] "நாம் எந்த அளவுக்குத் தேவனைக் கிட்டிச்சேருகிறோமோ, அந்த அளவுக்கு உலகத்திலிருப்பவைகள் நம்மைவிட்டுத் தூரமாகப் போய் நம்மைப் பாதிக்காமல் இருக்கும்."[2] "உலகக் கவலைகள் அனைத்திலிருந்தும் விடுபட்டு எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு ஒரே வழி தேவனுக்கு அருகில் இருப்பதே யாகும்."[3]

தேவனைக் கருத்திற் கொள்ளாத நிலையில் நாம் இவ்வுலக வாழ்க்கையைப் பார்த்தால், அது நமக்கு துயரத்தையே ஏற்படுத்தும். ஆனால், நாம் தேவனுக்கு அருகில் இருந்து நம்முடைய வாழ்க்கையைப் பார்த்தால் அது சந்தோஷமான அனுபவமாகவே இருக்கும். அப்பொழுது தேவன் உண்மையிலேயே நம்முடைய வாழ்வில் நல்லவராக இருக்கின்றார் என்பதை அறிந்திடலாம். 16ம் சங்கீதத்தில் தாவீது இதைப்பற்றி எழுதும்போது, "உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங்.16:11) என்று குறிப்பிட்டுள்ளான்.

தேவனுக்கு அருகில் வந்த சங்கீதக்காரன், தேவன் தனக்கு செய்தவற்றை மற்றவர்களுக்கு அறிவிப்பவனாகவும், தேவனை நம்பியவனாக வாழப்போவதாகவும் கடைசி வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். உண்மையில், தேவன் நம்முடைய வாழ்வில் செய்தவற்றை மற்றவர்களுக்கு அறிவிக்கவேண்டியது நமது கடமையாக உள்ளது. தேவனைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிப்பதற்கு மிகவும் இலகுவான வழி, அவர் நம்முடைய வாழ்வில் செய்தவற்றை மற்றவர்களுக்கு அறிவிப்பதேயாகும். துன்மார்க்கரின் செல்வச் செழிப்பான வாழ்வைப் பார்த்து பொறாமையும், துயரமும் கொண்ட சங்கீதக்காரன், தேவன் எவ்வாறு தன்னுடைய துயரத்தை நீக்கி, சந்தோஷத்தைக் கொடுத்தார் என்பதை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்குத் தீர்மானித்தான். அதேசமயம்,

---

[2] C.H.Spurgeon, *The Treasury of David*, p. 637.

[3] J.Flanigan, *Psalms: Ritchie Old Testament Commentaries*, p. 318.

இனிமேல் தான் துன்மார்க்கரைப் பார்த்து அல்ல, தேவனை நம்பி வாழப்போவதாகவும் தெரிவித்துள்ளான். துன்மார்க்கர் அழிந்து போகும் செல்வத்தை நம்பி வாழ்வதனால், அவர்களும் அழிந்து போகின்றார்கள். ஆனால் சங்கீதக்காரனைப்போல நாமும் அழியாத நித்திய தேவன்மீது நமது நம்பிக்கையை வைத்திருக்க வேண்டும். துயரங்கள் நிறைந்த இவ்வுலகில் தேவனை நம்பி வாழ்வதே இன்பமான வாழ்வின் இரகசியமாக உள்ளது.

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து,
உங்களுக்கு இருக்கிறவைகள்
போதுமென்று எண்ணுங்கள்.
நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை,
உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர்
சொல்லியிருக்கிறாரே.
அதினாலே நாம் தைரியங்கொண்டு
கர்த்தர் எனக்குச் சகாயர். நான் பயப்படேன்
மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று
சொல்லலாமே (எபி.13:5-6).

நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால்,
கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில்
வீற்றிருக்கும் இடத்திலுள்ள
மேலானவைகளைத் தேடுங்கள்.
பூமியிலுள்ளவைகளையல்ல,
மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால்
நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன்
கிறிஸ்துவுடனே தேவனுக்குள்
மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து
வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட
மகிமையிலே வெளிப்படுவீர்கள் (கொலோ. 3:1-4).



# உசாத்துணை நூல்கள்

## 73ம் சங்கீதத்தைப் பற்றிய ஆய்வுகள்
## SPECIAL STUDIES ON PSALM 73


Allen, Leslie C. "Psalm 73: An Analysis" in *Tyndale Bulletin*. 33 (1982), pp. 93-118.

Blank, Sheldon H. "The Nearness of God and Psalm Seventy Three" in *To Do and To Teach*. ed. R.M.Pierson. Lexington: The College of the Bible, 1953, pp. 1-13.

Buber, Martin. "The Heart Determines: Psalm 73" in *Theodicy in the Old Testament*. ed. J.L.Crenshaw. Philadelphia: Fortress Press, 1983.

Bush, M.J. The Psalms of Asaph and Korah in *Journal of Biblical Literature*. 82 (1963), pp. 382-392.

De Boer, P.A.H. "The Meaning of Psalm LXXIII 9" *Vetus Testamentum*. XVIII (1968), pp. 260-264.

Jellicoe, K.J. "The Interpretation of Psalm 73,24" in EvT, LXVII (1955-1956), pp. 209-210.

Kraus, H.J. "Psalm 73" in *Bethel*. XI (1973), pp. 3-12.

Lloyd-Jones, D.Martyn. *Faith on Trial: Studies in Psalm 73*. Leicester: Inter Varsity Press, 1983.

McCann, J.C. *Psalm 73: An Interpretation Emphasising Rhetorical and Canonical Criticism*. PhD. Dissertation. Duke University, 1985.

__________. "Psalm 73: A Microcosm of Old Testament Theology" in Sheffield: JSOT, pp. 247-257.

Perdue, Leo G. "Psalm 73" in *Wisdon and Cults*. Missoula: Scholars Press, 1977, pp. 286-291.

Rice, G. An Exposition of Psalm 73" in *Journal of Religious Thought*. 41 (1984), pp. 76-86.

Ross, James F. "Psalm 73" in *Israelite Wisdom*. ed. J.G.Gammie. Missoula: Scholars Press, 1978, pp. 161-175.

சங்கீதப் புத்தகத்திற்கான விளக்கவுரைகள்

## COMMENTARIES ON PSALMS

Alexander, Joseph A. *The Psalms Translated and Explained Volume 1,* New York: Baker and Scribner, 1851.

Allen, Leslie C. *Psalms 101-150: Word Biblical Commentary Volume 21*. Waco: Word Books Publisher, 1983.

Anderson, B.W. *Out of the Depths: The Psalms Speak for Us Today*. Philadelphia: Westminster Press, 1974.

Anders-Richards, Donald. *The Drama of the Psalms*. London: Darton, Longman & Todd, 1968.

Armstrong, Edyth D. *Studies in the Psalms*. Chicago: Associatod Authors, 1937.

Binnie, William. *The Psalms: Their History, Teachings, and Use*. London: Hodder and Stoughton, 1886.

Boice, James Montgomery, *Psalms Volume 2: An Expositional Commentary*. Grand Rapids: Baker Book House, 1994.

Briggs, Charles Augustus & Briggs, Emilie Grace. *Psalms: The International Critical Commentary Volume* 2. New York: Scribner's Press, 1914.

Broyles, Craig. *Psalms: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1999.

Brueggemann, W. *Psalms: A Theological Commentary*. Minneapolis: Augsburg Publishing Company, 1984.

Buber, M. *Right and Wrong: An Interpretation of Some Psalms*. London: SCM Press, 1952.

Buttenwieser, Moses. *The Psalms: Chronologically Treated with a New Translation*. Chicago: Chicago University Press, 1938.

Calvin, John. *Commentary on the Book of Psalms Volumes 1-5*. Grand Rapids: Eerdman Publishing Company, 1949.

Clarke, Arthur G. *Analytical Studies in the Psalms*. Kansas City: Walteric Publishers, 1949.

Clements, Roy. *Songs of Experience: Midnight and Dawn through the Eyes of the Psalmists*. Fearn: Christian Focus, 1993.

Cohen, A. *The Psalms: An Introduction and Commentary*. London: Soncino Press, 1985.

Dahood, Mitchell. *Psalms Volume 1-3: Anchor Bible Commentary*. Garden City: Doubleday, 1965/1968/1970.

Delitzsch, Franz. *Biblical Commentary on the Psalms Volumes 1-3*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1970.

Dickson, David. *A Commentary on the Psalms*: London: The Banner of

Truth Trust, 1959.
Eaton, John. *The Psalms: A Historical and Spiritual Commentary.* London: T&T Clark International, 2003.
Forbes, John. *Studies on the Book of Psalms*. Edinburgh: T&T Clark, 1888.
Harris, Arthur Emerson. *The Psalms Outlined*. Philadelphia: The Judson Press, 1948.
Kidner, Derek. *Psalms 73-150: Tyndale Old Testament Commentaries* Leicester: Inter Varsity Press, 1975.
Kirkpatrick, A.F. Psalms: *Cambridge Bible Commentary*. Cambridge: Cambridge University Press, 1902.
Knight, George A.F. *Psalms Volume 1: The Daily Study Bible*. Philadelphia: The Westminster Press, 1982.
Kraus, H.J. *Psalms: A Commentary Volume 2*. Minneapolis: Augsburg Publishing House, 1989.
Leslie, Elmer A. *The Psalms In the Light of Hebrew Life and Worship*. Nashville: Abingdon Press, 1949.
Leupold, H.C. *Exposition of the Psalms*. Grand Rapids: Baker Book House, 1972.
Mays, J.L. *The Psalms: Interpretation*. Louisville: John Knox Press, 1994.
Motyer, J.A. *Psalms: New Bible Commentary – 20th. Century Edition*. Leicester/Downers Grove: Inter Varsity Press, 1994.
Plumber, W.S. *Psalms: The Geneva Series of Commentaries*. Edinburgh: The Banner of Truth Trust, 1975.
Ross, Allen P. *Psalms: The Bible Knowledge Commentary Old Testament*. Wheaton: Victor Books, 1985.
Spurgeon, Charles H. The Treasury of David: An Updated Edition Nashville: Thomas Nelson Publishers1997.
Stott, John R.W. *The Canticles and Selected Psalms*. London: Hodder & Stoughton, 1966
Tate, Marvin E. *Psalms 51-100: Word Biblical Commentary Volume 20*. Waco: Word Books, 1990.
VanGemeren, Willem A. Psalms: *The Expositor's Bible Commentary Volume 5*. Grand Rapids: Zondervan Publishing House, 1991.
White, R.E.O. *A Christian Handbook to the Psalms*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1984.
Weiser, Artur. *Psalms: The Old Testament Library*. Philadelphia: The Westminster Press, 1962.
Wiersbe, Warren W. *Be Worshipful: Psalms 1-89*. Colorado Springs: Cook Communications Ministries, 2004.
Wilson, Gerald. *Psalms Volume 1: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 2002.

# ஆசிரியரின் பிற நூல்கள்

## இவை விரைவில்
## இந்தியாவில் வெளியிடப்படும்

1. இயேசுகிறிஸ்து யார்?
   ஏழு சுயவெளிப்பாட்டு கூற்றுக்களின் விளக்கவுரை.
2. வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?
   வேதாகமம் தேவனுடைய வாத்தைா என்பதற்காக ஆதாரச் சான்றுகளை அறியத்தரும் நூல்.
3. இது ஒரு கிறிஸ்தவ குடும்பம்
   கிறிஸ்தவ குடும்பம் பற்றிய வேதாகமப் போதனை
4. இயேசுகிறிஸ்து இறைவனா?
   இயேசுவின் தேவத்துவத்திற்கான ஆதாரங்கள்
5. கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்
   கிறிஸ்த்வ வாழ்வு எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதை அறியத்தரும் நூல்.
6. இயேசுகிறிஸ்து ஒரு சரித்திர நபரா?
   இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்ததற்கான சரித்திர, புதைபொருள் ஆதாரச்சான்றுகளை அறியத்தரும் நூல்
7. திருமறையும் திருமணமும்
   திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் பற்றிய வேதாகமப் போதனைகளை விளக்கும் நூல்.
8. கர்த்தரின் வார்த்தைகளில் கடினமான வரிகள்
   இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் புரிந்து கொள்ள முடியாத வசனங்களுக்கான விளக்கவுரை
9. புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு
   வேதாகமம் உருவான சரித்திர விடயங்கள்
10. யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்
    யெகோவாவின் சாட்சிகளுக்கு பரிலளிக்கும் முறை

## வேதாகம நபர்களின் வாழ்வுச் சரிதைகள்

1. ஒரு விதவையின் விவாகம்
   ரூத் புத்தகத்திற்கான விளக்கவுரை
2. ஓடிப்போனவன்
   யோனா தீர்க்கதரிசியின் நூலுக்கான விளக்கவுரை
3. ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்
   ராகாபின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
4. மகளையே பலியிட்ட மனிதன்.
   யெப்தாவின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை
5. விபரீதமான வீரன்
   சிம்சோனின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
6. சில சம்பவங்களில் சில சத்தியங்கள்
   கிறிஸ்தவ பக்தர்களின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களை அறியத்தரும் நூல்
7. ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்
   யோவான் 4ம் அதிகாரத்திற்கான விளக்கவுரை
8. தேவனின் பாதத்தைத் தேடிவந்த பாவை
   மரியாளின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்

## சங்கீதத்திற்கான விளக்கவுரைகள்

1. கர்த்தரின் பராமரிப்பில் களிகூர்ந்திடும்பக்தன்
   23ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
2. மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்
   19ம் சங்கீதத்திற்கான இறையியல் விளக்கவுரை
3. ஒரு வியாதியஸ்தனின் விண்ணப்பம்
   38ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
4. ஓத்தாசையாயிருக்கும் ஒப்பற்ற தெய்வம்
   121ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
5. புண்பட்ட உள்ளங்களில் புறப்படும் உணர்வுகள்
   137ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
6. மானிட வாழ்வும் மகத்தான தேவனும்
   139ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
7. மரணப் பள்ளத்தாக்கிலும் பயப்படாத மனிதன்
   27ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
8. சங்கீதங்களின் சத்தியங்கள்
   சங்கீதப் புத்தகத்திற்கு ஒரு அறிமுகம்.

# துன்மார்க்கரின் வளமும் நீதிமானின் துயரமும்

73ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை

தேவபக்தியற்ற துன்மார்க்கர் உலகில் செல்வச் செழிப்புடன் சுகபோகமாக வாழும்பொழுது, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து பக்தியுடன் வாழும் நீதிமான்களுடைய வாழ்க்கையில் துயரங்கள் வருவது பலருக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இத்தகைய குழப்பத்துடனிருந்த சங்கீதக்காரன் தேவனுடைய பிரசன்னத்தில் அறிந்து கொண்ட உண்மைகள் இச்சிறுநூலில் ஆராயப்பட்டுள்ளன.

## THE PROSPERITY OF SINNERS AND THE SUFFERINGS OF THE SAINTS

An Expository Study on Psalm 73

by

**M. S. VASANTHAKUMAR**

இலங்கையில் பதினாறு வருடங்களாக வேதாகமக் கல்லூரியின் விரிவுரையாளராகவும், சத்தியவசனம் சஞ்சிகையின் ஆசிரியராகவும், பணியாற்றிய வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார், தற்பொழுது இங்கிலாந்தில் இறைபணியாளராகப் பணிபுரிவதோடு, வேதாகமத்தை ஆராய்ச்சி செய்து தமிழ் மொழியில் விளக்கவுரைகள் எழுதும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

சத்தியவசனம்
9.வெங்கட்ராமன் தெரு, சின்னசொக்கிகுளம்,
மதுரை-625 002, போன்: 0452-2532316
E-mail: svmadurai@eth.net